www.uthayannews.ca
UTHAYAN உதயன்
Issue: 1271
Friday August 14, 2020

*Everyone is hero of their health*

# ekuruvi ~~Night~~ Steps 2020




EKURUVISTEPS.CA

பேரன்புக்குரிய நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்

10,000 Steps Per Day , BMI யைக் குறைத்து உடல் எடையைப் பேணுவது, நீரிழிவு, இருதய நோய் என்பவற்றை வராது தடுப்பது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது என்று பல பயன்களைக் கொண்ட இந்த நடைப்பயிற்சியைத் தொடர்ந்து எங்களுடன் செப்டம்பர் 26 வரை ஒரு நாளுக்கு 10,000 காலடிகள் இலக்கு நிர்ணயித்து நிறைவேற்றுவதன் மூலம், நாளடைவில் அதுவே பழக்கமாகி உடல் ஆரோக்கியம் மேம்பட உதவும். எங்களுடன் இணைத்து கொள்ளுங்கள் .

அன்புடன்

நவஜீவன் அனந்தராஜ்

**MORE INFO CALL 416-272-8543**

HOMELIFE HIGHER STANDARDS HomeLife / Future Realty Inc., Brokerage
NAVA WILSON LLP BARRISTERS AND SOLICITORS
iNFORCE Health Benefits Inc. Healthy Living Starts Here.
Insurance Ajay Are you Insured?
NS DENTAL
PREMIER HEALTH CANADA "A Health System"

YOU PAY $100 FOR YOUR HEALTH,
EKURUVI MATCHES 10% AND DONATES
FOR EDUCATIONAL PROJECT IN NORTH-EAST SRI LANKA

HOSTING BY



NAVAJEEVAN ANANTHARAJ
SALES REPRESENTATIVE
RE/MAX COMMUNITY REALTY INC. BROKERAGE

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1271 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 14, 2020

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# கனடியப் பிரதமருக்கும் அமைச்சர்கள் சிலருக்கும் எதிரான அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன என்கிறது மத்திய காவல்துறையான ஆர்சிஎம்பி



அண்மைக்காலமாக கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களுக்கும் மற்றும் அவரது அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்களுக்கும் எதிரான அச்சுறுத்தல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளதாக, கனடாவின் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஆர்சிஎம்பி எனப்படும் காவல்துறை அலுவலகம் வழங்கியுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

மேற்படி ஆர்சிஎம்பி எனப்படும் மத்திய காவல்துறையின் பாதுகாப்புக்கு பொறுப்பான பிரிவு இதுவரை 130 அச்சுறுத்தல் நடவடிக்கைகளை கண்காணித்துள்ளதாகவும். மேற்படி அச்சுறுத்தல்கள் கனடியப் பிரதமரையும் அவருடைய அமைச்சர்கள் சிலரையும் குறி வைத்தே நடத்தப்பட்டுள்ளன என்றும் இந்த அச்சுறுத்தல் நடவடிக்கைகளானது, கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் யூலை மாதம் வரையில் பெற்ற தரவுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களை விட இவ்வாறான அச்சுறுத்தல் தற்போது அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள ஆர்சிஎம்பி அலுவலகம், இவற்றைப் பற்றி காவல்துறை வெளியே பகிரங்கமாக பேசாவிட்டாலும், சமூக ஊடகங்கள் வாயிலாக இந்த விடயங்கள் பொதுமக்கள் அறியும் படியாக மாறிவிட்டன என்றும் தெரிவித்துள்ள்து.

மேற்படி அச்சுறுத்தல்கள் அரசியல் காரணங்களுக்காகவா அல்லது அரசாங்கம் தொடர்பானவையா என்பதை மேற்படி ஆர்சிஎம்பி அலுவலகம் குறிப்பிடவில்லை.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

# Sun Sea கப்பல் கனடாவை அடைந்த பத்தாவது ஆண்டை நினைவ கூர்ந்த மக்களோடு பாராளுமன்ற உறுப்பினர் ஹரி



இன்றிலிருந்து பத்தாண்டுகளுக்கு முன்னர் 492 அகதிக் கோரிக்கையாளர்களுடன் கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியாவின் விக்டோரியா நகரை வந்தடைந்த சண் சி கப்பல் கனடாவை அடைந்த பத்தாவது ஆண்டை நினைவு கூர்ந்த மக்களோடு நேற்று இரவு எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியும் ஒன்றாகக் கூடி நின்று மெழுகுதிரி ஏற்றி தங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொண்டார்கள்

மேற்படி அகதிக் கோரிக்கையாளர்கள் ஒன்றாக, கடலில் மூன்று மாத பயணத்தின் போது தாங்கிக் கொண்ட வலிகள் ஆகியவற்றை பகிர்ந்து கொண்டார்கள்.

இந்தச் மெழுகுதிரி ஏற்றும் நிகழ்வு தொடர்பாக தனது சமூக ஊடகமொன்றில் பதிவு செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கடந்து வந்த கடற்பயணத்தை அங்கு வந்தவர்கள் பிரதிபலிக்கும் வகையில் உரையாடல்கள் இடம்பெற்றன. கனடாவை வந்தடைந்த சில குடும்பங்கள் கனடாவில் கைது செய்யப்பட்ட போது அவற்றையும் அவர்கள் தாங்கிக்கொண்டனர், ஆனால் பத்து ஆண்டுகளுக்கு பின்னர், அவர்களில் பலரது வாழ்வு அமைதி, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய தேடல் ஆகியவற்றோடு தொடர்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

THAMOR PAWN BROKER
தாமோர் நகை அடைவு மாளிகை
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX

# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



## உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta credit™

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



**Scarborough / Downtown Toronto: 416-489-2000**
**Mississauga / Brampton: 416-650-5400**

| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |



**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*
**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*





# அம்மா Amma Pawn Broker

## தங்க நகை அடைவு மாடம்

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை

1.5% முதல் 2.0% வட்டி மட்டுமே (per month)



உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும் மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்

**416-757-0034**
**416-994-3861**

**105A - 2425 Eglinton Ave. E, Scarborough**
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்

எவ்வளவு தொகையானாலும் மிகக் குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

**GHURUS TOWING**

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



**NIRMALAN (ROGER):**
(416) 990-7777
(416) 984-7777

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
(416) 894-6244

**ஆலய முகாமையாளர் (Manager) தேவை**

ரொரண்டோவில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயம் ஒன்றிற்கு ஆலய முகாமையாளர் (Manager) தேவை. தமிழிலும், ஆங்கிலக்திலும் எழுத, வாசிக்க, பேசத் தெரிந்திருக்க வேண்டும். இருப்பிட வசதி வழங்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப் படும்.

**Call:**
(647) 762-5804

**SPOKEN ENGLISH**

100% உத்தரவாதம்!
ஆங்கிலம் எதுவும் கதைக்கமுடியாதவர்கள் 2 மாதத்தில் சரளமாக பேச முடியும்
Letter writing, Essay writing, Citizenship exam preparation மற்றும் IELTS preparation.
நம்பிக்கையுடன் அழையுங்கள்

**துஸ்யந்தி:**
(647) 606-1009

**TRUCK DRIVERS WANTED**

DZ Drivers wanted.
GTA and surrounded areas.

**Contact: Nathan S**

(416) 520-1324

**WAREHOUSE WORKERS NEEDED**

ஸ்காபுறோ நகரில்
**Markham / Ellesmere**
சந்திப்புக்கு அருகில் உள்ள ஒரு தொழில் ஸ்தாபனத்திற்கு Warehouse Workers தேவை.
Full-time for morning & afternoon shifts.
விண்ணப்பதாரிகள் கடுமையாக வேலை செய்பவர்களாகவும், அதிக சிரத்தை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். சம்பளத்துடன் பயிற்சி வழங்கப்படும்.
ஆர்வமுடையோர் Essa என்பவரை **(647) 993-2872** என்னும் இலக்கத்தில் அழைக்கவும்.

உதயன் கதிரோட்டம்

# கள்ள வாக்கும் நல்ல வாக்கும்

அன்பான வாசகர்ப் பெருமக்களே!
எமது கடந்த வார "கதிரோட்டம்" கூட இந்த "கள்ள" வாக்கு விவகாரத்தையே முக்கிய கருப்பொருளாகக் கொண்டு வடிக்கப்பட்டது. எமக்கும் கவலைதான். மனதைத் தேற்றிக் கொண்டு இந்த வாரமும் இந்த "கள்ள வாக்கோடு" நல்ல வாக்கு என்பதையும் கதிரோட்டத்தின் தலைப்போடு சேர்த்துக் கொண்டுள்ளோம்.

நல்ல வாக்கு என்ற இரு சொற்களுக்கு நல்ல அர்த்தமே உண்டு. நல்லதைப் பேசுதல் என்பதே அதன் பொருள். கள்ள வாக்கு என்கின்றபோது எமக்கு "புள்ளடி" தான் ஞாபகத்திற்கு வரும். ஆனால் இந்த நாட்களில் கள்ள வாக்குக்கும் புள்ளடிக்கும் தொடர்பே இல்லாமல் போய்விட்டது என்ற "உண்மை" சில நாட்களுக்கு முன்னர் நடந்த இலங்கைத் தேர்தலின் மூலம் எமக்குத் தெரிய வந்தது.

நல்லவர்கள், நன்றாகச் சிந்தித்து, முகக் கவசம் அணிந்து வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று, தங்கள் வாக்குகளை தாம் விரும்பியவர்களுக்கு அளித்து விட்டு வீடு திரும்பி, பின்னர் இரவிரவாக "எங்கள் வாக்குகளின் பலனை அறிவோமே" என்று காத்திருந்தவர்களுக்கு அதிர்ச்சி.

நீதியை விரும்புகின்றவர்கள் சொல்லுகின்ற நல்ல வாக்குகளைக் கேட்டு நல்லவர்கள் என்று தாங்கள் தீர்மானித்தவர்களுக்கு அளித்த வாக்குகள், இன்னொருவரின் வெற்றிச் செய்தியை காவிச் செல்லுகின்றன என்ற விடயத்தை அறிந்த போது தான் அந்த "நல்லவர்கள்" கலங்கினார்கள். அவர்கள் கண்ணீர் சொல்லி நின்ற விடயத்தை உலகமே அறிந்து கோபத்தோடு இருக்கையில் நல்ல வாக்குகளை "கள்ள" வாக்குகளாக மாற்றி கபடம் செய்தவர்கள், உண்மை பேசுபவர்கள் போல பாசாங்கு செய்கின்றார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் தேர்தகளில் கடைப்பிடிக்கப்படும் "சிஸ்டம்" இவ்வாறான சட்டத்திற்கு முரணான ஏமாற்று வேலைகளை செய்ய விடாது என்றும் கள்ள வாக்கு பெற்றவரின் பக்கம் நிற்கும் இன்னுமொருவர் கிளிநொச்சியில் நடத்திய ஊடகச் சந்திப்பில் துணிவாகப் பேசினார்.

இங்கு எது நடந்துள்ளது என்றால், தோல்வியின் விளிம்பையும் தாண்டி குழிக்குள் விழுந்த ஒருவரை மீட்டெடுக்க காரணமாக இருந்த வாக்குகள், களவு செய்த வாக்காளர்களால் இடப்படவில்லை. ஆனால் நல்ல வாக்குகள், யாழ்ப்பாணத்தில் களவாடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நபர் வாக்குகளின் அடிப்படையில் தனது தோல்வியை ஏற்றுக் கொண்டு விலகிச் சென்றிருந்தால், அடுத்தடுத்து நடைபெறுகின்ற ஊடகச் சந்திப்புகளோ அன்றி கருத்து மோதல்களோடு இடம் பெற்றிருக்காது. மாறாக, எமது தமிழ் மக்கள் வடக்கில் மேலும் மேலும் கூறுகளாக பிரிக்கப்பட்ட வண்ணம் உள்ளார்கள். இதற்கு காரணமானவர்கள் எழுந்து நின்று பேசுவதற்கு மக்கள் சந்தர்ப்பம் வழங்கவில்லை. ஆனால் எப்போதோ ஆற்றிய ஒரு "பேருதவி"க்காக, பரிசுகள் இன்னும் பெற்றுக்கொண்டே இருக்கின்றார்கள். பச்சையோ நீலமோ இரண்டுமே இவ்வாறானவர்களுக்கு ஒன்றாகிப் போய்விட்டதே என்று கூட நாங்கள் அவர்களிடத்தில் இன்னும் கேட்காமலேயே உள்ளோம். வெட்கமாக இருக்கிறது அல்லவா?

இனி, தோல்வியடைந்த ஒருவரை வெற்றியடையச் செய்த ஆட்சியின் உயர் பீடமானது மக்கள் ஆதரவு குறைந்த ஒருவரை கள்ள வாக்குகளால் வெற்றியடையச் செய்ததன் மூலம் மக்கள் நிராகரித்த ஒருவருக்கு பாராளுமன்ற ஆசனம் ஒன்றை வழங்கியிருக்கின்றது. தொடர்ந்து அவருக்கு அச்சுறுத்தல் அதிகம் உள்ளதாக உலகிற்கு காட்டி கடுமையான இராணுவத்தின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. சமாதானத்தை விரும்பாத தமிழர்கள் சிலர் அவரைக் குறிவைத்துள்ளார்கள் என்றும் வெளியுலகிற்கு காட்டி, அவர்கள் "சமதானத் தூதர்" என்று போற்றப்படுவார்கள்.

வெற்றியை அடைய முடியாமற் போனவர் தேர்தல் பிரச்சாரங்களின் போது மேடையில் "சவால்" விடுத்துள்ளார். இதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. "நான் இந்தத் தேர்தலில் ஒரு இலட்சம் விருப்பு வாக்குகள் பெறுவேன்" என்று. அந்த நேரத்தில் அவருக்காக பல ஏற்பாடுகள் அரச மட்டத்தில் செய்யப்பட்டிருக்கலாம். அவர் தோல்வியடைந்த வேட்பாளர் ஆகி நடுத் தெருவிற்கு வந்துவிடக் கூடாது என்று அந்த "உயர் பீடம்" முடிவெடுத்திருக்கலாம். அந்து முடிவு தான் முடிவு செய்யப்பட்ட ஒரு முடிவாகப் போய்விட்டது. ஆனால் பாவம், அந்த கொடுமையான முடிவிற்கு ஒரு புத்திஜீவியான பெண்மணி ஒருவர் பலிக்கடா ஆகிவிட்டார்.

இனிமேல் அந்த கள்ள வாக்குகளால் பெற்ற வெற்றியை தாங்கிய வண்ணம் அவர் செய்யப்போகின்ற அரசியல் பயணம் என்பதும், ஒரு களங்கமுள்ள பயணமாக இருக்கப்போகின்றது. இதனால் கலகங்கள் பல நிகழலாம்.

தமிழ் மக்களுக்கு இவ்வாறான பிரதிநிதிகளால் தொடர்ந்தும் பிரச்சனைகளும் அவமானங்களும் தோல்விகளும் வந்த வண்ணமே இருக்கப்போகின்றன. ஆனால் முறையற்ற வழியில் வெற்றி பெற்ற அவர்கள், அனைத்து வளங்களையும் பெற்று அரசின் பாதுகாப்போடு வீதிகளில் வலம் வரவே போகின்றார்கள்.

ஒரு பழமொழி இருக்கின்றது."தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்று. எமது இனத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை வரையும் சென்று வினையை விதைத்தமைக்கான பலனை அவர்கள் மீண்டும் அனுபவிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த நிலையை மாற்றக்கூடியவர்கள் எம்மோடு இல்லாமல் போய்விடவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களில் நீதியின் பக்கம் நிற்பவர்கள், இவ்வாறானவர்களை புறக்கணிக்க வேண்டும், அல்லது ஒதுக்க வேண்டும். தமிழர்களுக்கு எதிரான அநீதி மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றுபடுபவர்கள் இணைந்து செயற்படக் கூடியவர்கள், அதை உடனேயே செய்ய வேண்டும்

அப்போதுதான் இனிமேல் எமது இனத்தின் மீதான அநீதியின் தாக்குதல்களின் அகோரம் தணியும் என்று நாம் நம்புகின்றோம்.

உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.

**NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!**

- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca

MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1

**ARI A. ARIARAN** CPA, CGA
Chartered Professional Accountant

# வவுனியாவில் முள்ளாள் போராளி மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்



வவுனியாவில் முள்ளாள் போராளி மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியதில் படுகாயமடைந்த நபர் வவுனியா பொது வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் போராளியும்,சமூக சேவகரும், தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவருமான வி.விநோதரன் என்பவர் மீதே கடந்த திங்கட்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
வவுனியா கரப்பன்காட்டு பகுதியில் அமைந்துள்ள தமிழர் நிலம் மக்கள் அமைப்பின் அலுவலகத்திற்குள் நேற்று இரவு உட்புகுந்த மர்மநபர்கள் முன்னாள் போராளி மீது சராமரியாக தாக்குதல் நடத்தியுடன் அலுவலகத்தில் இருந்த ஐம்பதாயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

முன்னாள் போராளி மீதான தாக்குதல் தொடர்பாக அயலவர்களால் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதுடன், நோயாளர் காவுவண்டி மூலம் படுகாயமடைந்த நபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.
வவுனியாவில் தாக்குதலுக்குள்ளான முன்னாள் போராளி வன்னி பகுதி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் ஊடாக மனிதாபிமான சேவைகள் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஊடக அமைச்சர் கெஹெலிய கடமைகளை பொறுப்பேற்ற வைபவத்தில் கலந்து கொண்ட வியாழேந்திரன்



வெகுசன ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கடமைகளை பொறுப்பேற்றார். இந்நிகழ்வில் தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் கலந்து கொண்டார்.
வெகுசன ஊடக அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள கெஹெலிய ரம்புக்வெல்ல இன்று (13) தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

கடமைகளை பொறுப்பேற்ற அமைச்சர் தெரிவிக்கையில், இந்நாட்டினுள் சுயாதீன மற்றும் பக்கச்சார்பற்ற ஊடக பாரம்பரியம் கட்டியெழுப்படும் என்றார்.
இந்நிகழ்வில் தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் கலந்து கொண்டார்.

இதன்போது ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.
இதற்கு முன்னரும் வெகுசன ஊடக அமைச்சராக கெஹெலிய ரம்புக்வெல்ல பணியாற்றியிருந்தார். 30 வருடகால யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில், அப்போதிருந்த அரசாங்கத்தில் ஊடக பேச்சாளராகவும்கெஹலிய ரம்புக்வெல்ல செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போன தன் மகனுக்காக காத்திருந்த மற்றுமொரு தாய் உயிரிழப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மற்றுமொரு தாயார் கடந்த திங்கட்கிழமையன்று உயிரிழந்துள்ளார்.
முல்லைத்தீவு – மாணிக்கபுரம் விசுவமடு பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய மைக்கல் ஜேசு மேரி என்பவரே, இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
2009ஆம் ஆண்டு, மாத்தளன் பகுதியில் தனது மகனான மைக்கல் ஜோசப் என்பவர் காணாமலாக்கப்பட்ட நிலையில், தன்னுடைய மகனைத் தேடி தொடர்ச்சியாக முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் இவர், நேற்று சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். முல்லைத்தீவில், இந்தத் தாயாருடன் தமது உறவுகளை தேடிவந்த 18 உறவுகள் உயிரிழந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்துவதற்கு காவல்துறையினர் தடை

செஞ்சோலைப் படுகொலை நிகழ்வுகள் நடத்துவதற்கு ஸ்ரீலங்கா காவல்துறையினர் தடை விதித்துள்ளனர். அதை மீறி நினைவேந்தல் செய்வோர் கைது செய்யப்படுவார்கள் என எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.
2006 ஆகஸ்ட் 14 அன்று சிங்கள விமான படையினர் நடாத்திய தாக்குதலில் 54 மாணவிகள் உட்பட 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.
வருடம் வருடம் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், ஏற்பாட்டாளர்களை புதுக்குடியிருப்பு காவல்துறை நினைவுகூர தடை விதித்துள்ளனர்.
மீறி நினைவு கோருவோர் கைது செய்யப்படுவார்கள் என எச்சரித்துள்ளனர்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பு உடனே கலைக்கப்பட வேண்டும் எனகிறார் வீ.ஆனந்தசங்கரி

தமிழ் தேசிய கூட்டமைப்பு திருட்டுத்தனமாக உருவாக்கப்பட்ட கட்சி என்று சாடியுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, கூட்டமைப்பு உடனடியாக கலைக்கப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருட்டுத்தனமான வழியிலேயே உருவாக்கப்பட்டது. அந்தக் கட்சிக்கு தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு கூட இல்லை. தற்போதைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலைக்கப்பட வேண்டும்.
ஏனெனில் தந்தை செல்வா இறந்து பல வருடங்களின் பின்னரே மாவை சேனாதிராசா அந்தக் கட்சியை பொறுப்பேற்றவர். அதற்கு யாரும் அனுமதி கூட வழங்கவில்லை. மாறாக தமிழீழ விடுதலைப்



புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த சு.ப.தமிழ்ச்செல்வன் அனுமதி வழங்கியே மாவை கட்சியின் பொறுப்பை ஏற்றுகொண்டார்.
இவ்வாறு அனைத்தும் திருட்டுத்தனமாகவே நடைபெற்றது. அதனால்தான் கூட்டமைப்பை உடனடியாக கலைக்க வேண்டும் என கோருகின்றேன். மாவை,சம்பந்தன்,சுமந்திரன் தவிர்ந்த அனைத்து தரப்புக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைய முன்வரவேண்டும்.

பலமான ஓர் கூட்டினை உருவாக்க வேண்டும். அதற்காகவே வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை கட்சியின் பொறுப்பை ஏற்குமாறு அழைப்பு விடுத்திருந்தேன். எனினும் அவர் இன்றுவரை முன்வரவில்லை என்றார்.

# இலங்கைத் தேர்தல்: இடம்பெற்ற சுவாரஸ்யமான சம்பவங்கள்

இலங்கையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இதற்கு முன்னர் இருந்திராத வகையில் பல புதிய விடயங்களும் சம்பவங்களும் அரங்கேறியுள்ளன.

இத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்ற நிலையில் அக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச நாட்டின் பிரதமராக ஞாயிற்றுக்கிழமை (09.08.20) ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.



பதவிப் பிரமாணம் செய்து வைத்த பின்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது மூத்த சகோதரரான மஹிந்த ராஜபக்சவின் பாதம் தொட்டு ஆசி பெற்றார். அதன் பின்பு இருவரும் கட்டியணைத்து அன்பை வெளிப்படுத்திக் கொண்டது சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. பதவியைவிடப் பாசமும் மரியாதையும் பெரியது என்பதை இந்த நிகழ்வு காட்டியது.

நாடாளுமன்றத்த்திற்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களில் வயதில் மூத்தவராக த.தே.கூ தலைவர் இரா.சம்பந்தர் (வயது 87) விளங்குகிறார். அதே நேரம் மிகக் குறைந்த வயதில் ஜீவன் தொண்டமான்(வயது 26) நாடாளுமன்றம் செல்கிறார்.



1977ல் நடைபெற்ற தொகுதிவாரி தேர்தல் முறையில் தெரிவானவர்களில் சம்பந்தர் மட்டுமே இம்முறையும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார். இவரைத் தவிர தொகுதிவாரி தேர்தல் முறையில் வென்றவர்கள் யாரும் இம்முறை நாடாளுமன்றத்தில் இல்லை.

1970, 1977 தேர்தல்களில் கிளிநொச்சித் தொகுதியிலிருந்து தெரிவான த.வி.கூ தலைவர் வீ.ஆனந்தசங்கரி இறுதியாக 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் தான் தெரிவாகியிருந்தார். இம்முறை அவர் போட்டியிட்டார் எனினும் வாய்ப்பு கிட்டவில்லை.

கால் நூற்றாண்டுக்கு பின்னர் டெலோ மூத்த உறுப்பினர்களில் ஒருவரான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) இந்தத் தேர்தலில் மீண்டும் நாடாளுமன்றத்ம் செல்கிறார்.

1989 தேர்தலில் தனது 25ஆம் வயதில் த.வி.கூ சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவாகி முதல் முறையாக அவர் நாடாளுமன்றத்ம் சென்றிருந்தார். எனினும் அடுத்து வந்த 1994 தேர்தலில் தனது கட்சி சார்பிலும் 2015 தேர்தலில் த.வி.கூ சார்பிலும் போட்டியிட்டாலும் வெற்றி கிடைக்கவில்லை.



இந்த தேர்தல்களின் முடிவுகளின் படி ஓரிரு பிரதான கட்சிகளின் தலைவர் மற்றும் பொதுச் செயலர்கள் ஆகியோர் தோல்வி கண்டுள்ளனர். ஐ.தே.க தலைவர் ரணில் விக்ரமசிங்க, செயலர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் முறையே கொழும்பு மற்றும் குருநாகலை மாவட்டங்களில் போட்டியிட்டு தோல்வி கண்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா யாழ் மாவட்டத்திலும், பொதுச் செயலர் கி.துரைராஜசிங்கம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் படுதோல்வியடைந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வரலாற்றில் 50 வருடங்களுக்குப் பிறகு தலைவர் மற்றும் செயலர் தோல்வி கண்ட சம்பவம் இத்தேர்தலில் பதிவாகியுள்ளது.

1970 தேர்தலில் அப்போது தலைவராக இருந்த மறைந்த சி.மு.இராசமாணிக்கம் பட்டிருப்புத் தொகுதியில் ஐ.தே.க வேட்பாளர் சோ.உ.தம்பிராஜாவால் தோற்கடிக்கப்பட்டார். செயலாளராக இருந்த அ.அமிர்தலிங்கம் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளரான அ.தியாகராசாவிடம் தோல்வி கண்டார்.

சுதந்திரத்துக்கு பின் டி.எஸ்.சேனநாயக்க தொடக்கம் மஹிந்த ராஜபக்ச வரை 14 பேர் பிரதமராகப் பதவி வகித்துள்ளனர். பிரதமர் பதவி வகித்த ஒருவர் நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் 60 வருடங்கள் பின்னர் ரணிலின் தோல்வி மூலம் மீண்டும் பதிவாகியுள்ளது.

1959 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் இடைக்காலப் பிரதமராக டபிள்யூ.தஹநாயக்க பதவியேற்றிருந்தார். 1960 தேர்தலில் பிரஜா தந்திரவாதி கட்சி சார்பில் காலி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவியது இந்நேரத்தில் நினைவுகூரத்தக்கது.

கடந்த 2015 தேர்தலில் நாட்டிலேயே அதிகூடிய (500,566) விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த ரணில் விக்ரமசிங்க இம்முறை தோல்வியடைந்தார்.

இம்முறை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளராக குருநாகலையில் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ச நாட்டிலேயே அதிகமாக ( 527,364) விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். விகிதாசார தேர்தல் வரலாற்றில் இதுவே மிக அதிகமான விருப்பு வாக்குகள் என்று தெரிய வருகிறது.

அதேவேளை ஆகக் குறைந்த விருப்பு வாக்குகளை (3203)வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டுத் தெரிவான பெற்ற ஈ.பி. டி.பியைச் சேர்ந்த குலசிங்கம் திலிபனும் நாடாளுமன்றத்ம் செல்கிறார்.




1977 வரை ஆம் ஆண்டு தொகுதிவாரி தேர்தல் கடைசியாக நடைபெற்றது. அப்போது புத்தளம் தொகுதியிலிருந்து ஐ.தே.க சார்பில் தெரிவான நயினா மரைக்கர் 1989 வரை பதவி வகித்தார். அதன் பிறகு விகிதாசர முறையில் புத்தளம் மாவட்டத்திலிருந்து முஸ்லிம்கள் யாரும் தெரிவாகவில்லை. இந்நிலையில் நடைபெற்ற தேர்தலில் புத்தளம் வாழ் முஸ்லிம்களின் அபிலாஷ‘ நிறைவேறியுள்ளது.

முஸ்லிம் கட்சிகள் இணைந்து முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பாக முன் நிறுத்திய வேட்பாளர்களில் ஒருவரான ரி‘ாத் கட்சியைச் சேர்ந்த அலி சப்ரி ரஹீம் வெற்றி பெற்று நாடாளுமன்றத்ம் செல்கிறார்.

2015 தேர்தல் ஐ.ம.சு.மு, ஐ.தே.க, த.தே,கூ, முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, ஜே.வி. பி ஆகிய ஆறு கட்சிகளுக்கு மட்டுமே நாடாளுமன்றத்த்தில் அதிகாரப்பூர்வமான பிரசன்னம் இருந்தது. இம்முறை அந்த எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

இந்த 15 கட்சிகளில் சிறுபான்மைக் கட்சிகள் கணிசமான இடத்தைப் பிடித்துள்ளன. தமிழ் காங்கிரஸ், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு, பிள்ளையான் கட்சி, விக்கினேஸ்வரன் கட்சி, ரி‘ாத் கட்சி, அதாவுல்லா கட்சி போன்ற கட்சிகளிலிருந்தும் நேரடியாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கைத் தேர்லில் முறைகேடுகள் தொடர்பான சந்தேகமுள்ளது என்கிறார் வவுனியா பிரஜைகள் குழுத் தலைவர்

உள்நாட்டு நீதிப் பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்தமையினாலேயே தமிழ் மக்கள் தம் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை ஒன்றைக் கேட்டு நிற்கின்றார்கள். சிறீலங்கா அரச படைகளால் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள் பற்றிய பல வழக்குகளில் பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழ் மக்களுக்கு நியாயமான பரிகார நீதி கிடைக்கவில்லை என்பதாலேயே, தமிழ் மக்கள் தாங்கள் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகிறோம். சித்திரவதைகளுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறோம். அதற்கு தாராளமாக இடம் கொடுக்கும் ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி அதிகாரக் கட்டமைப்புக்குள் இதற்கு மேலும் சகித்துக் கொண்டு வாழ முடியாது. ஒரு தேசமாக பிரிந்து போய் தம்மை பாதுகாத்துக் கொள்ள சர்வஜன வாக்கெடுப்பையும் ஐ.நாவில் வலியுறுத்துகிறார்கள்.



கடந்த காலங்களில், இலங்கைத் தீவில் முக்கிய வழக்குகளின் நீதிமன்றத் தீர்ப்புகளை இறுதி நேரத்தில் வரும் தொலைபேசி அழைப்புகள் மாற்றி அமைத்துள்ளதாக குற்றச்சாட்டுகள் உண்டு. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தனது ஆட்சிக் காலத்தில் நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்கு உட்படுத்தும், அதைச் சந்தேகிக்கும் வகையில் இருட்டு மூலைகளில் நடந்தேறிய இவ்வாறான சூட்சும விசயங்களை பொதுத்தளத்தில் பேசு பொருளாக்கியிருந்தார். அவர் கடுமையாக குற்றம் சுமத்திய ராஜபக்ச தரப்பினரே இப்போது மறுபடியும் இலங்கைத் தீவில் ஆட்சிபீடம் ஏறி உள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது. உள்நாட்டு நீதிபரிபாலனக் கட்டமைப்பை போன்றே சிறீலங்கா அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், விசாரணைக் குழுக்கள் உள்ளிட்ட இதர அரச கட்டமைப்புகளிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்தே இருக்கிறார்கள்.

கடந்த 2015 நாடாளுமன்றத் தேர்தலைப் போன்றே இம்முறை 2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆளும் அரச அதிகார மையம், சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கான நெருக்கடிகள் தலையீடுகளிலிருந்து தம்மைப் பாதுகாத்து உள்நாட்டுப் பொறிமுறைகளை செயற்படுத்துவதற்கு, வழக்குத் தொடுநர்களாகிய பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பில் இருந்தே தமக்கு ஒத்திசைந்து போகக் கூடியவர்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தேர்தல் முடிவுகள் மாற்றி அமைக்கப்பட்டதாக மக்கள் அச்சமும் சந்தேகமும் கொண்டுள்ளனர்.

வெற்றி வாய்ப்பு தொங்குப் பொறி நிலையில் இருந்த ஒரு வேட்பாளருக்கு சார்பாக, அரச இயந்திரத்தின் ஏவல் படையான பொலிஸார் அதே கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு பெண் வேட்பாளரின் ஆதரவாளர்களை மிருகத்தனமாக தாக்கியமை, அரச நிகழ்ச்சி நிரலுக்கு இசைந்து போகக் கூடியவரும் தமக்கு வேண்டப்பட்டவருமாகிய அந்த வேட்பாளரின் வருகைக்காக காத்திருந்து வாக்கு எண்ணும் நிலையத்தின் முடிவுகளை நீண்ட நேரம் தாமதித்து இழுத்தடித்தமை, கள்ள மௌனம் மற்றும் செயற்கைத்தனமாக அமைதி இன்மையை அங்கு ஏற்படுத்தி வலிந்து கலவரத்தை உண்டு பண்ணியமை எல்லாமே, இது உண்மையாகவே சனநாயக முறைப்படி நடந்த தேர்தல் தானா? என்ற பலத்த சந்தேகத்தை கிளப்புகிறது.

ஆகவே தான் 2020 நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களுக்கு பன்னாட்டு கண்காணிப்பாளர்களின் பங்களிப்பின் அவசியத்தையும் தேவையையும் உணர்த்தி நிற்கிறது. ஸ்ரீலங்கா அரச அதிகார மையம் தீர்மானம் எடுக்கும் தமிழ் மக்களின் வாழ்வுரிமை சார்ந்த விவகாரங்களில் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தமிழ் மக்கள் உண்மை மற்றும் நீதியைக் கண்டறியவும் சர்வதேச தலையீடுகள் அத்தியாவசியமானது என்றும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு நம்புவதோடு இதனை மக்கள் மன்றத்திலும் பிரேரிக்கிறது. என்று கோ.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# இலங்கையின் புதிய அமைச்சரவை: வெங்காயம்; மிளகாய்; வெற்றிலை; பித்தளைக்கு அமைச்சர்கள்

- சிவா பரமேஸ்வரன்

இலங்கையில் வெற்றிலை மங்களகரமான ஒரு பொருளாகக் கருதப்பட்டு மதிக்கப்படுகிறது. குறிப்பாக பௌத்த சிங்களவர்கள் எந்த சுப காரியங்களிலும் வெற்றிலை கொடுத்து வரவேற்பது அவர்களின் பாரம்பரியம். இம்முறை அமைச்சர்களுக்குப் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கும் போது வெற்றிலைக்கு தனி அடையாளம் கிடைத்துள்ளது.



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முன்னிலையில் 40 ராஜாங்க அமைச்சர்களில் கரும்பு, சோளம், மர முந்திரிகை, மிளகு, கருவா, கிராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர் செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத் தொழில்கள், ஏற்றுமதி ராஜாங்க அமைச்சராக ஜனக வக்கும்பர பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கையில் 29 அமைச்சுக்களைக் உள்ளடக்கிய 25 பேர் கொண்ட அமைச்சரவையில் ஆறு அமைச்சுகள் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்முறை நாடாளுமன்றத்துக்கு ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து தெரிவான ஐந்து பேரில் நான்கு பேருக்கு அமைச்சுப் பதவிகள் கிடைத்துள்ளன. ராஜபக்சக்களின் சகோதரி மகனான நிபுண ரணவக்க மாத்தறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பெயர் பொறுப்பு கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சு மஹிந்த ராஜபக்ச நிதி அமைச்சு புத்த சாசனம் மற்றும் கலாச்சார அமைச்சு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு சமல் ராஜபக்ச நீர்ப்பாசன அமைச்சு உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள், அனர்த்த முகாமைத்துவ ராஜாங்க அமைச்சு நாமல் ராஜபக்ச இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சு சசீந்திர ராஜபக்ச (சமல் மகன்) வெங்காயம், மிளகாய், கிழக்கு போன்றவை உற்பத்தி அமைச்சு அமைச்சரவையில் டக்ளஸ் - அலி சப்ரி:

ஆளும் தரப்பில் நேரடியாகவும் பங்காளியாகவும் 8 தமிழர்கள் உள்ள போதிலும் மூவருக்கு மட்டுமே அமைச்சுப் பதவி கிடைத்துள்ளது. டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள மீன்பிடித்துறை அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச. வியாழேந்திரன் தபால் மற்றும் தகவல் தொடர்பாடல் ராஜாங்க அமைச்சரானார். இ.தொ.காவைச் சேர்ந்த ஜீவன் தொண்டமான் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு ராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றார்.

ஆளும் தரப்பிலுள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை ஐந்து. அதில் தேசியப் பட்டியல் உறுப்பினரான அல் சப்ரிக்கு மட்டுமே அமைச்சுப் பதவி கிடைத்துள்ளது. அவர் நீதித்துறைக்கான கேபினட் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் எனப்படும் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், தேசியக் காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.அதாவுல்லா ஆகியோருக்கு அமைச்சுப் பதவி கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில் ஏமாற்றமே மிஞ்சியது.



இந்த அமைச்சரவை பதவிப் பிரமாண நிகழ்வின் போது மட்டக்களப்பு மாவட்டம் தவிர ஏனைய மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுத் தலைவர் நியமனங்களும் வழங்கப்பட்டன. அந்த வெற்றிடத்துக்கு பிள்ளையான் நியமிக்கப்படக் கூடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

மைத்திரி இல்லாத அமைச்சரவை: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இம்முறை 14 ஆசனங்கள் கிடைத்துள்ளன. அக்கட்சியைச் சேர்ந்த நிமல் ஸ்ரீபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. துமிந்த டி சில்வா மற்றும் தயாசிறி ஜெயசேகர ஆகியோர் ராஜாங்க அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுள்ளனர்.



மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் இடம்பெறுவார் என்று எதிர்ப்பார்க்கப்பட்டப் போதிலும் அவர் அமைச்சரவையில் இடம்பெறவில்லை. இருப்பினும் அமைச்சர்கள் பதவிப் பிரமாண நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

புது முகங்கள் உள்ளே பழைய முகங்கள் வெளியே:

ஏற்கனவே அமைச்சர்களாக இருந்த மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேம ஜெயந்த, ரஞ்சித் சியம்பலபிட்டிய, ஜோன் செனவிரட்ன, எஸ். பி. திஸநாயக்க, அனுர பிரியதர்ஷன யாப்பா, மஹிந்த சமரசிங்க, விஜேதாச ராஜபக்ச ஆகியோருக்கு இம்முறை அமைச்சராகும் வாய்ப்பு கிட்டவில்லை. இவர்களில் பலர் மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசில் அங்கம் வகித்தவர்கள். அமைச்சுப் பட்டியலில் இவர்களுக்கு இடமளிக்கப்படாதது பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதேவேளை இம்முறை நாடாளுமன்றத்தில் புது முகங்களாக நுழைந்த அலி சப்ரி, ஜீவன் தொண்டமான், மருத்துவ நிபுணர் சீதா அரம்பேபொல, அஜித் நிவாட் கப்ரால், சசீந்திர ராஜபக்ச, நாளக கொடகேவா, பேராசிரியர் சன்ன ஜெயசுமன ஆகியோரில் அலி சப்ரி தவிர ஏனையோர் ராஜாங்க அமைச்சர்கள்.

அமைச்சுப் பதவியில் பெண்கள்: ஆளும் தரப்பிலுள்ள எட்டுப் பெண்களில் மூவருக்கு மட்டுமே அமைச்சுப் பதவிகள் கிடைத்துள்ளன. பவித்திரா வன்னியாராய்ச்சிக்கு சுகாதார அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

சுதர்ஷனி ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு ராஜாங்க அமைச்சராகவும், சீதா அரம்பேபொல திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, தகவல் தொழில்நுட்ப ராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 28, ராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 40. இதில் ஒரு ராஜாங்க அமைச்சுப் பதவி இன்னும் நிரப்பப்படவில்லை.

வெங்காயம், மிளகாய், போன்றவற்றுக்கு ராஜாங்க அமைச்சர்கள்: மூ மரக்கறிகள், பழவகைகள், மிளகாய் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கைக்கு ஒரு ராஜாங்க அமைச்சர். மூ பால் மற்றும் முட்டைக்கு ஒரு ராஜாங்க அமைச்சு. மூகரும்பு, சோளம், மர முந்திரிகை, மிளகு, கருவா, கிராம்பு, வெற்றிலைக்கு இவற்றுக்கெல்லாம் ஒரு ராஜாங்க அமைச்சு. மூ பிரம்பு, பித்தளை, மண் பாண்டங்கள் ஆகியவற்றுக்கும் ஒரு ராஜாங்க அமைச்சு.



பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கியுள்ள நிலையில் கொரோனோ தாக்கம் மேலும் நிதிச் சுமைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இந்த அளவுக்குத்தேவையில்லாத துறைகளுக்கு அமைச்சர்களை நியமிக்க வேண்டிய அவசியம் என்ன? என்று சமூக ஊடகங்களில் கேள்விகள் எழுந்துள்ளன.

மக்கள் நலன் என்று வரும்போது கொரோனாச் சூழலை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று கூறும் அரசு அமைச்சர்களின் எண்ணிக்கையை ஏன் குறைக்கக் கூடாது என்று மக்கள் கேட்கும் கேள்விக்கு அரசின் பதில் என்ன?.

இது இலங்கையில் ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்பதையே காட்டுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

# தமிழ் மக்களின் ஆணை - 2020 ஓகஸ்ட்



சமூகவலைத் தளங்களின் உலகத்தில் மக்கள் ஆணை எனப்படுவது அதன் புனிதத்தை மேலும் இழந்திருக்கிறது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளிலேயே வலதுசாரிகள் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்படும் ஒரு நிலைமையைக் காணலாம். எனவே எல்லா மக்கள் ஆணைகளும் புனிதமானவை அல்ல. ஆனாலும் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை 2009க்கு பின் தேர்தலை விட்டால் வேறு அரசியல் செயல்வழி எதனையுமே தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் அரசியல்வாதிகளும் கண்டுபிடித்திருக்கவில்லை.

எனவே மக்கள் ஆணையை பெறவும் மக்கள் அதிகாரத்தை பெறவும் தேர்தல்களை விட்டால் வேறு வழியில்லை என்ற ஒரு நிலை. எனவே சரியோ பிழையோ தேர்தல்கள் மூலம் கிடைக்கின்ற மக்கள் ஆணையைதான் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நிலைமை. மக்களை விமர்சன பூர்வமாக சிந்திக்க வைப்பதன் மூலம் வாக்களிப்பில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்த தமிழ் கட்சித் தலைவர்களில்
பெரும்பாலானவர்களால் முடியவில்லை.

தமிழ் வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் பழகிய சின்னத்துக்கும் பழகிய கட்சிக்கு வாக்களித்து வருகிறார்கள். அல்லது இனம் மொழி மதம் பிரே-தசம் சமயம் என்று சிந்தித்து வாக்களிக்கிறார்கள். மக்களை கொள்கை ரீதியாக விமர்சன பூர்வமாக சிந்திக்க வைக்கும் தகமையோ அல்லது வழங்களோ பெரும்பாலான தமிழ் கட்சிகளிடம் இல்லை.

ஏன் அதிகம் போவான்? தமிழ் கட்சிகளின் பிரமுகர்களும் உட்பட அவற்றின் அடிமட்ட தொண்டர்கள் எத்தனை பேர் விமர்சனபூர்வமாக சிந்திக்கக்கூடிய தகைமையை கொண்டிருக்கிறார்கள்? இது ஒரு பிரச்சினை. கட்சிகள் விமர்சன பூர்வமாக சிந்தித்தால் தான் தொண்டர்களை அந்த வழியில் பயிற்றுவிக்கலாம். தொண்டர்களை அவ்வாறு பயிற்றுவிக்கும் ஒரு கட்சிதான் மக்களையும் விமர்சனபூர்வமாக சிந்திக்கும் வாக்காளர்களாக மாற்றும். ஆனால் பெரும்பாலான தமிழ் கட்சிகளிடம் அவ்வாறான மக்கள் பங்கேற்பு ஜனநாயகம் குறித்த நவீன அரசியல் தரிசனங்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

இப்படிப்பட்டதோர் துர்ப்பாக்கியமான வெற்றிடத்தில் தான் கிடைக்கின்ற மக்கள் ஆணையை வைத்து அடுத்த கட்டத்தைச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இந்த அடிப்படையில் கடந்த ஐந்தாம் திகதி தமிழ் மக்கள் வழங்கிய ஆணையைச் சற்று ஆழமாகப் பார்க்கலாம்.

முதலாவதாக கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட ஆணை. இப்பொழுதும் தனிப் பெரும் கட்சியாக அதுதான் காணப்படுகிறது. ஆனால் கடந்த முறை வழங்கப்பட்டதை விட மிகப் பலவீனமான ஒரு மக்கள் ஆணை அக்கட்சிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 11 ஆண்டுகளாக அக் கட்சிதான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக காணப்பட்டது. இப்பொழுது அது சோதனைக்கு உள்ளாகியிருக்கிறது. அதுமட்டுமல்ல அந்த வீழ்ச்சி எந்த வகையானது என்று பார்த்தால் வடக்கில் அக்கட்சி தனது ஆசனங்களை மாற்று அணியிடமும் தென்னிலங்கைக் கட்சிகளிடமும் இழந்திருக்கிறது. வன்னியில் அதை முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும் சில தென்னிலங்கை மைய கட்சிகளிடமும் இழந்திருக்கிறது.

கிழக்கில் தனது வாக்கு தளத்தை பிரதேச உணர்வுகளை அல்லது முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளை முன்னிறுத்தும் தரப்புக்களிடம் இழந்திருக்கிறது. இதில் மாற்று அணியைத் தவிர்த்து கூட்டமைப்பின் வாக்குத் தளத்தை உடைத்திருக்கும் கட்சிகள் யார் யார் என்று பார்த்தால் அவை பெரும்பாலும் அரசாங்கத்துக்கு சேவகம் செய்யும் கட்சிகளே. எனவே கூட்டமைப்பு தமிழ்தேசிய நோக்கு நிலைக்கு எதிரான தரப்புகளிடம் தனது வாக்குத் தளத்தின் ஒரு பகுதியை இழந்து விட்டது.

இதன் பின்விளைவாக கூட்டமைப்பின் இதயமாக காணப்படும் தமிழரசுக் கட்சிக்குள் பூசல்கள் அதிகரித்திருக்கின்றன. அக்கட்சியின் தலைமைத்துவதுக்கான போட்டிகள் அதிகரித்துள்ளன. எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் தமிழ் மக்கள் கூட்டமைப்பை தமது ஏகபோக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே தமிழ் மக்கள் வழங்கிய ஆகப் பிந்திய ஆணையாகும்.

அடுத்தது மாற்று அணி. இந்த அணி தனக்குள் ஒற்றுமைப்படவில்லை. ஒற்றுமைப்பட்டு இருந்திருந்தால் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட உட்பூசல்களை வெற்றிகரமாகக் கையாண்டு கூட்டமைப்பைப் பெருமளவுக்குத் தோற்கடித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு தோற்கடிக்க மாற்று அணியால் முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் இரண்டு மாற்று அணிகளும் பெற்ற மொத்த வாக்குகள் - 91230 ஆகும்.

அதேசமயம் அங்கஜனும் டக்ளஸ் தேவானந்தாவும் பெற்ற மொத்த வாக்குகள் - 95170 ஆகும்.இது மாற்று அணி பெற்ற மொத்த வாக்குகளை விட அதிகம். எனவே மாற்று அணிக்கு கிடைத்த மக்கள் ஆணை எனப்படுவது தாமரை மொட்டின் நண்பர்களுக்கு யாழ்ப்பாண மக்கள் வழங்கிய ஆணையை விடவும் பலவீனமானதா? அதேசமயம் வன்னியில் இரண்டு மாற்று அணிகளும் பெற்ற வாக்குகளின் மொத்த எண்ணிக்கை - 17021 ஆகும். ஆனால் வன்னியில் ஈபிடிபி பெற்ற மொத்த வாக்குகள் - 11310 ஆகும்.

இதன்மூலம் அக்கட்சிக்கு மேலும் ஓர் ஆசனம் கிடைத்தது. அப்படி என்றால் மாற்று அணி ஒன்றுபட்டு நின்றிரு ருந்திருந்தால் அந்த ஆசனம் அவர்களுக்கு தானே கிடைத்திருக்க வேண்டும்?

இந்தப் தேர்தலின் மூலம் மாற்று அணி கிழக்கிலும் வன்னியிலும் பலமாகக் கிளை பரப்பவில்லை என்பது தெரிய வந்திருக்கிறது. மாற்று என்பது ஒரு யாழ்ப்பாண மைய சிந்தனைதான் என்று குற்றம் சாட்டுபவர்கள் இந்த மக்களை ஆணையை எடுத்துக் காட்டுவார்கள். மாற்று அணி அது கூறும் தேசிய நோக்கு நிலையிலிருந்து தன்னை வன்னியிலும் கிழக்கிலும் பலப்படுத்த வேண்டிய தேவை அதிகரித்து விட்டது.

இல்லையென்றால் அது தன்னைத் தமிழ்த்தேசிய மாற்றாகக் கருத முடியாத ஒரு மக்கள் ஆணை தான் இம்முறை கிடைத்திருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மூன்றாவது முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்கள். இதில் ஒரு பகுதியினரை 2009க்கு பின் வித்தியாதரன் தத்தெடுத்தார். ஆனால் வெற்றிபெற முடியவில்லை. அதன்பின் அவர்கள் கூட்டமைப்போடு இணைந்தார்கள். அப்பொழுதும் வெற்றிபெற முடியவில்லை.

இம்முறை அவர்களை டெனீஸ்வரன் தத்தெடுத்தார். ஆனால் தேர்தலுக்கு கொஞ்ச நாட்களுக்கு முன் டெனீஸ்வரன் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு பத்திரிகையாளர் மாநாடு வைத்துக்கூறினார். டெனீஸ்வரனால் தத்தெடுக்கப்பட்ட விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை என்ற சுயேட்சைக் குழு தேர்தலில் டெனீஸ்வரன்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# இலங்கையின் வடக்கு,கிழக்கு பிரதேச தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன்



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் சரி வடக்கு, கிழக்கின் தனித்துவங்களும் அந்த மண்ணின் இருப்பும் பாதுகாக்கப்பட வேணும் என்பது மிக முக்கியமான விடயமாகும்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் இணைத்தலைவர்களில் ஒருவருமான சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், “எந்தவிதமான பிரயோசனமும் இல்லாத அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தஅரசின் அமைச்சரவை முழுக்க முழுக்க சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிறுவக்கூடிய வகையில் குடும்பத்தின் ஆட்சியினை நிலை நிறுத்தக்கூடிய வகையிலும் தான் இந்த ஆட்சியின் அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் எதிர்காலம் என்பது மிகவும் கேள்விக்குரிய காலகட்டமாக இருக்கின்றது தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள்.

குறிப்பாக முல்லைத்தீவு மண் பறிபோகக்கூடிய நிலை இருக்கின்றது. அதற்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்போது நாடாளுமன்றம் சென்றுள்ள அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முக்கியமான கடமை தமிழ் மக்களின் இருப்புக்களை பாதுகாப்பது.

தமிழர்களின் மண் பாதுகாக்கப்படவேண்டும். வடக்கு கிழக்கு நிலத் தொடர்ச்சி என்பது பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்காக உலகத்தின் ஒத்துழைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

வந்துள்ள அரசு சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிலை நிறுத்துவதற்கான அரசாங்கம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறைந்தபட்சம் கொள்கை ரீதியாக இவ்வாறான விடயங்களில் அவர்கள் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு ஒன்றிணையாமல் தனித்து செயற்படுவோம் என்பது வெளியில் பேச்சளவில் சரியாக இருந்தாலும் செயற்பாட்டினை பொறுத்தமட்டில் வடக்கு, கிழக்கினை சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் சரி வடக்கு,கிழக்கின் தனித்துவங்களும் அந்த மண்ணின் இருப்பும் பாதுகாக்கப்பட வேணும் என்பது மிக முக்கியமான விடயமாகும்.

இந்த விடயத்தில் ஒற்றுமையாக செயற்படவேண்டிய தேவையுள்ளது. இல்லாவிட்டால் கடுமையான நிலையினை எதிர்நோக்கும் கட்டத்தில் நாங்கள் வந்து கொண்டிருக்கின்றோம்.” என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# பொதுமக்கள் அரசியல்வாதிகளை வழிநடத்தும் பொறிமுறை அவசியம் என்கிறது தமிழ் மக்கள் பேரவை




பொதுமக்கள், அரசியல்வாதிகளை வழிநடத்தும் ஒரு பொறிமுறை நோக்கி நகர முயற்சி எடுக்க தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும் என தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பாக பேரவை விடுத்துள்ள அறிவிப்பில், “நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே மக்கள் தமது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்த மக்கள் தீர்ப்பு மதிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இந்தத் தேர்தலில் எந்தவொரு அணியினருக்கும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. அத்துடன் இந்தத் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கிடையேயும் கட்சிக்குள்ளேயும் பல முரண்பாடுகளும் ஜனநாயக விரோதப் போக்குகளும் தலைதூக்கியிருப்பது வேதனையானது. இதனால் மக்கள் குழப்பமும் கவலையும் அடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பை விமர்சனம் செய்வதிலும் பார்க்க சுயவிமர்சனம் செய்து தத்தமது நடவடிக்கைகளை நெறிப்படுத்திக் கொள்வது ஆரோக்கியமானதாக அமையும்.

தீய நோக்கங்களுக்காக தவறான கருத்துக்கள் பதிவிடப்படுவதும் அவற்றின் உண்மைத்தன்மை அறியாது அவை பகிரப்படுவதும் குழப்பநிலைகள் மேலும் அதிகரிக்க வழிவகுக்கும். கருத்துக்கள் பதிவிடப்படும்பொழுது பிறரின் மனம்நோகாது சரியான, நாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களுடன் உண்மையை எழுதிக்கொள்வது தமிழரின் மரபுக்கு வலுச்சேர்க்கும். ஒருவரிலே பழி தீர்ப்பதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துவது அறம் ஆகாது. இவை சமூகங்களுக்கிடையே பிரிவினையை வளர்த்துக்கொள்வதற்கே வழிவகுக்கும். சமூக ஒற்றுமை என்பது தேசியத்தின் அடிநாதம். ஒற்றுமையில்லாது வெறுப்புக்கள் நீரூற்றி வளர்க்கப்படின் தேசியம் மடிந்து போகும்.

ஒரு துர்ப்பாக்கிய நிலை தோன்றலாம். ஒரு சமூகம் அங்கு நடைபெறும் நல்ல விடயங்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்துமாயின், அது வளர்ச்சி பெறுவதுடன் ஒற்றுமையும் மேலோங்கும். எதையும் சந்தேகக் கண்ணுடன் நோக்கி தீய சம்பவங்களை மட்டுமே வடித்தெடுத்து அநாகரிகமாக விமர்சிப்பது பிரிவுகளை ஆழமாக்கும். காலத்தின் தேவை கருதி தமிழ் மக்கள் பேரவையானது தமக்கென ஒருபுதிய யாப்பினை அறிமுகம் செய்யவிருக்கின்றது. இது தேர்தல் அரசியல் கடந்து தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும் அவர்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் வழிசமைக்கும். இந்த முயற்சியிலே பொது அமைப்புக்களினதும், பொதுமக்களினதும் பெரும் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுமக்கள், அரசியல்வாதிகளை வழிநடத்தும் ஒரு பொறிமுறை நோக்கி நகர முயற்சி எடுக்க தமிழ் மக்களை அணிதிரள அழைக்கின்றோம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களின் ஆணை - 2020 ஓகஸ்ட்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

உடனான தொடர்புகளை துண்டித்துக் கொண்டு தனித்துப் போட்டியிட்டது. எனினும் வெற்றி பெற முடியவில்லை.

இதுதவிர திருகோணமலையில் புலிகள் இயக்கத்தின் முன்னாள் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் விக்னேஸ்வரனின் கட்சியில் போட்டியிட்டார். ஆனால் தோற்று விட்டார். இம்முறை கிடைத்த மக்கள் ஆணையை வைத்து முன்னாள் புலிகள் இயக்கத்தவர்கள் ஒரு தொகுக்கப்பட்ட முடிவுக்கு வரவேண்டும். தேர்தல் அரசியலில் ஏன் தங்களால் தொடர்ந்தும் வெற்றி பெற முடியவில்லை? என்ற கேள்விக்கு அவர்கள் எல்லாக் கோணங்களிலிருந்தும் விடைகாண வேண்டும்.

அடுத்த தரப்பு சாதியை சமயத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட சுயேச்சைக் குழுக்கள். யாழ்ப்பாணத்தில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட சுயேச்சை குழுவுக்கு 5492 வாக்குகள் கிடைத்தன. வன்னியில் இந்து மத குருமார்களின் சுயேச்சைக் குழுவுக்கு 3147 வாக்குகள் கிடைத்தன.அதாவது இவ்விரண்டு சுயேட்சை குழுக்களும் வெற்றி பெறவில்லை. தமிழ் மக்கள் சாதியின் பேரால் அல்லது சமயத்தின் பேராலும் பிரிந்து போக மாட்டார்கள் என்பதனை இந்த மக்கள் ஆணை வெளிப்படுத்துகின்றதா?

அடுத்தது கிழக்கு மையக் கட்சிகள். வடக்கின் முதன்மையை நிராகரிக்கின்ற அதேசமயம் கிழக்கின் யதார்த்தத்துக்கு ஏற்றாற்போல மறைமுகமாகவோ நேரடியாகவோ முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் வாக்குகளை திரட்டும் நோக்கங்களைக் கொண்ட தரப்புக்கள். இதில் வியாழேந்திரன் நேரடியாக அரசாங்கத்தின் வேட்பாளராக களம் இறங்கினார்.

கருணா அம்பாறையில் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யும் உள்நோக்கத்தோடு போட்டியிட்டார். வாக்குகளை உடைத்து அதன் மூலம் கூட்டமைப்பை அம்பாறையில் தோற்கடித்தார். அவரும் வெல்லவில்லை கூட்டமைப்பும் வெல்லவில்லை. அதேசமயம் பிள்ளையானின் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. கூட்டமைப்பு பிள்ளையானைவிட 11768 வாக்குகளே கூடுதலாகப் பெற்றிருக்கிகிறது. மட்டக்களப்பில் பிள்ளையானுக்கு கிடைத்த மக்கள் ஆணை ஒரு விடயத்தை உணர்த்துகின்றது. பிரதேச உணர்வுகளை முன்னிறுத்தி தமிழ்த் தேசியத் திரட்சியை உடைக்கும் போக்கு பலமடைந்து வருவதை அது காட்டுகிறது. இது ஒருபுறம் தாயகக் கோட்பாட்டுக்கு எதிரானது. இன்னொருபுறம் முஸ்லிம்களுக்கு எதிரானது. மொத்தத்தில் ராஜபக்சக்களுக்கு நெருக்கமானது.

தாயகக் கோட்பாடு அதாவது வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை சிந்திக்க வைக்கும் போக்கு அதிகரித்து வருகின்றதா? இதுவிடயத்தில் கிழக்கின் உணர்வுகளை மதித்து தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் புதிய உபாயங்களை வகுக்க வேண்டும். வடக்கு கிழக்கு இணைப்புக்கு கிழக்கிலிருந்து எதிர்ப்பு வருமாக இருந்தால் விளைவு விபரீதம் ஆகும். எனவே கூட்டமைப்பும் மாற்று அணியும் கிழக்கில் தேசிய நீக்கம் செய்யப்படும் வாக்குகளை குறித்து தீவிரமாக சிந்திக்க வேண்டும்.

இதுதான் கடந்த 5ஆம் திகதி தமிழ் மக்கள் வழங்கிய ஆகப் பிந்திய ஆணையின் தொகுக்கப்பட்ட ஒரு படம். இந்தப்படத்தை நுட்பமாக ஆராய்ந்தால் பின்வரும் விடயங்கள் துலக்கமாக தெரியவரும். முதலாவது - கூட்டமைப்பு அதன் உட்பூசல்களால் பலவீனமடைந்து வரு கிறது. இரண்டாவது - தமிழ் மக்கள் சிதறி வாக்களித்திருக்கிறார்கள். மூன்றாவது - தென்னிலங்கைக் கட்சிகள் தமிழ் வாக்குகளை கவர்ந்திழுக்கும் நிலைமைகள் அதிகரித்து வருகின்றன.

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் விக்னேஸ்வரன் அவர்களின் சத்தியபிரமாணமும் அஞ்சலியும்



வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சி வி விக்னேஸ்வரன் தனது பாராளுமன்ற பயணத்தை முள்ளிவாய்க்கால் மண்ணில் சத்தியபிரமாணத்துடன் ஆரம்பித்துள்ளார்.

முல்லைத்தீவில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுதூபிக்கு நேற்றுக் காலை சென்ற விக்னேஸ்வரன் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் தனது சத்திய பிரமாணம் உரையை நிகழ்த்தினார்.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த விக்கினேஸ்வரன் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று முதற்தடவையாக பாராளுமன்றம் செல்லவுள்ள நிலையிலையே முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதே வேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாரர்ளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் சின்கிகிழமை முள்ளிவாய்க்காலில் உறுதிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# LEASE TO OWN



$58.88 WEEKLY +TAX

**2020 COROLLA L CVT**

1.69% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

# LEASE TO OWN



$88 WEEKLY +TAX

**2020 RAV-4 LE FWD**

4.99% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

# USED CARS

**COROLLA - 10 IN STOCK**
From $10,600 + tax - 2012 & up

**CAMRY - 10 IN STOCK**
From $17,700 + tax - 2015 & up

**RAV-4 - 15 IN STOCK**
From $14,500 + tax - 2012 & up

**SIENNA - 5 IN STOCK**
From $30,363 + tax - 2017 & up

## USED VEHICLES

HONDA

LEXUS

BMW

LAND ROVER

# YORKDALE TOYOTA

3080 Dufferin Street
Toronto, ON M6A 2S6

**Dufferin & Lawrence**

www.yorkdaletoyota.com

**NO CREDIT BAD CREDIT NO PROBLEM!**

# LEASE TO OWN



$90 WEEKLY +TAX

**2020 CAMRY SE**

0% LEASE FOR 39 MONTHS, 20,000 km/year

**FOR TONY SIVA'S CLIENTS!!!**

**$500 GAS CARD**

GAS CARD

with every purchase of New or Used Vehicle

**$0 DOWN on New or Used Vehicles**

புதிய பாவித்த
வாகனங்களை
தமிழில் உரையாடி
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள
அழையுங்கள்



**Tony Siva**

647-269-0749 tonymidtown@hotmail.com

www.yorkdaletoyota.com

Amma Brand

# இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!









# பிரச்சிகளின்போது ‘சும்மா’ அமர்ந்திருக்காமல் களமிறங்க வேண்டுமென்கிறார் இந்திய அமெரிக்கர் கமலா ஹாரிஸ்



“என் தாய் சியாமலா கோபாலன்தான் எனக்கு முன்மாதிரி. பிரச்சினை வரும்போது சும்மா அமர்ந்திருக்கக்கூடாது, புகார் செய்ய வேண்டும், களத்தில் இறங்கிப் போராட வேண்டும் என்று அடிக்கடி கூறுவார்” என்று அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் துணை அதிபராகப் போட்டியிடும் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட கமலா ஹாரிஸ் தெரிவித்தார். அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பிடன் போட்டியிடுகிறார். இதில் ஜனநாயகக் கட்சி சார்பில் துணை அதிபர் வேட்பாளராக இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட கலிபோர்னியா செனட்டர் கமலா ஹாரிஸை த் தேர்வு செய்து அதிபர் வேட்பாளர் ஜோ பிடன் நேற்று முன்தினம் புதன்கிழமை அறிவித்தார்.

கமலா ஹாரிஸின் தந்தை ஜமைக்காவைச் சேர்ந்தவர். தாய் ‘சியாமலா கோபாலன் இந்தியாவைச் சேர்ந்தவர். தமிழகத்தின் தலைநகர் சென்னையைச் சேர்ந்த சியாமலா ஹாரிஸ் கடந்த 1960களில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் புற்றுநோய் பிரிவில் மருத்துவப் பட்டம் பெற்று மார்கப் புற்றுநோய் நிபுணராகப் பணியாற்றினார். கமலா ஹாரிஸின் தந்தை டொனால்ட் ஹாரிஸ் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றினார். அமெரிக்க அதிபர் தேர்தலில் முதன்முதலாக கறுப்பினத்தையும், இந்தியப் பூர்வீகத்தையும் பின்புலமாகக் கொண்ட பெண் ஒருவர் துணை அதிபர் பதவிக்கு முன்மொழியப்பட்டு போட்டியிடுவது இதுதான் முதல் முறையாகும். இதனால், அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களிடையேயும், கறுப்பினத்து மக்களிடையேயும் கமலா ஹாரிஸுக்கு ஆதரவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

துணை அதிபர் வேட்பாளராக கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்டபின் முதன் முதலாக அதிபர் வேட்பாளர் ஜோ பிடனுடன் சேர்ந்து வில்விம்டனில் உள்ள டெலாவேர் நகரில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டம் மற்றும் நிதி சேர்ப்புக் கூட்டத்தில் பேசினார். கமலா ஹாரிஸ் துணை அதிபர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்ட 24 மணிநேரத்தில் ஜனநாயகக் கட்சிக்கு ரூ.195 கோடி நிதி சேர்ந்துள்ளது. டெலாவேர் நகரில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கமலா ஹாரிஸ் பேசியதாவது:

”என்னுடைய தாய் சியாமலா கோபாலன்தான் எனக்கு முன்மாதிரி. என்னையும், என் சகோதரி மாயாவையும் நம்பிக்கையூட்டி வளர்த்தவர் என் தாய் ‘சியாமலாதான். அதனால்தான் அமெரிக்காவில் நாங்கள் சிறப்பான உயரத்தை எட்ட முடிந்தது. தொடர்ந்து நடைபோட்டு வருகிறோம். என் தாய் எப்போதும் என்னிடம் சொல்வது என்னவென்றால், பிரச்சினை வரும்போது சும்மா அமர்ந்திருக்காதே, முடிந்தவரை புகார் செய், ஏதாவது செய், களத்தில் இறங்கிப் போராடு என்று சொல்வார். உங்களுக்குத் தெரியுமா? என்னுடைய தந்தையும், தாயும், உலகின் இரு எதிர் துருவங்களில் இருந்து அமெரிக்காவுக்கு வந்தவர்கள். என்னுடைய தாய் ‘சியாமலா இந்தியாவில் தமிழகத்தைச் சேர்ந்தவர். தந்தை ஜமைக்காவைச் சேர்ந்தவர். இருவரும் உலகத்தரமான கல்விக்காக அமெரிக்காவுக்கு வந்தார்கள்.



கடந்த 1960களில் நடந்த மக்கள் உரிமை இயக்கம்தான் என் தந்தையையும் தாயையும் ஒருங்கிணைத்தது. ஓக்லாந்து நகரின் தெருக்களில் இருவரும் மாணவர்களாக இருக்கும்போது போராடும்போது சந்தித்தார்கள். இருவரும் சேர்ந்தே போராடினார்கள், நீதிக்காக முழுக்கமிட்டனர். அந்தப் போராட்டம் இன்றுவரை தொடர்ந்து வருகிறது. நானும் அந்தப் போராட்டத்தின் ஒருபகுதியாக இருக்கிறேன். நான் பிறந்தபின் பல போராட்டங்களின்போது என்னை என் தாயும், தந்தையும் அழைத்துச் சென்றுள்ளார்கள். என்னுடைய தாய் சியாமலா என்னையும், என் சகோதரி மாயாவையும் வளர்த்து நம்பிக்கையூட்டினார். இந்தப் போராட்டம் நமக்கானது அல்ல, ஒவ்வொரு அமெரிக்க மக்களின் தலைமுறைக்கானது, தொடர்ந்து நடைபோட வேண்டும் என்று தெரிவித்தார். என் தாய் அடிக்கடி என்னிடம், ஏதாவது செய் எனச் சொல்வார். அவரின் வார்த்தையைக் கேட்டு ஏதாவது செய்தேன். ஆம், அவரின் வார்த்தையைக் கேட்டு, அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராகச் சேர்ந்து சட்டத்தின் கீழ் அனைவருக்கும் ஒரேமாதிரியான நீதி கிடைக்கப் போராடினேன்.

எனக்கு 30 வயதானபோது அமெரிக்க நீதிபதி முன் முதல் முறையாக வாதிட நின்றபோது, ஆழ்ந்து மூச்சை இழுத்துக்கொண்டு, எனது வாழ்நாள், தொழில் அனைத்தும் இந்த மக்களுக்காக அர்ப்பணிக்கிறேன் என்றேன். மாவட்ட அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டபோது, பாதிக்கப்பட்ட பல்வேறு மக்களுக்காக நான் போராடியிருக்கிறேன், உதவியிருக்கிறேன். துப்பாக்கி, போதை மருந்து, மனிதர்களைக் கடத்தும் அமைப்புகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அட்டர்னி ஜெனரலாக வாதிட்டேன். நான் கலிபோர்னியா செனட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அமெரிக்க மக்களுக்காக அதிபர் ட்ரம்ப் அரசு நம்பகத்தன்மையுடன், பொறுப்புடன் நடக்க வேண்டும் என்பதற்காக நாள்தோறும் குரல் கொடுத்திருக்கிறேன். நான் மட்டுமல்ல ஜோ பிடனும் சேர்ந்து வெள்ளை மாளிகையுடன் போரிட்டுள்ளார்”. இவ்வாறு கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.





GTA SQUARE MALL
GIFT PLUS
வழங்கும் இவ்வருட கோடை கால மலிவு விற்பனை
Fashion Mask (Kids & Adults)
Disposable Mask, Cloth Mask, Washable Mask
குறைந்த விலைகளில்....
Wheel Shoes
Regular Price: $ 39.99
Sale Price: $ 20.00
ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்
3 Set of Laughing Buddha
Regular Price: $ 20.00
Sale Price: $ 5.00
மிகவும் மலிவு
Green Buddha
Regular: $ 60.00
Sale Price: $ 40.00
ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்
24 Gold Plated God Statue
$ 25.00
ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்
Cup & Saucer Set (12PCS)
$ 25.00
ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்
Table Top (Jelly Fish Design)
Reg: $20.00
Sale Price: $ 5.00
New Design Bubble Gun
Light Up & Music $ 15.00
ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்
Music Light up T.Shirt
Regular: $ 40.00
Sale Price: $ 20.00
Baba Pendant & Baba Keychain
Sale Price ONLY:
$ 1.00
Collectable Unique Statue $ 1.00
GIFT PLUS
In GTA Square Mall
5215 Finch Avenue East – Unit 104. Scarborough. ON M1S 0C2
(416) 804-8999
Artificial Flowers $ 20.00 ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்
**Some Items are limited. One for Person.**
தினமும் புதிய வரவுகள்.
வாருங்கள் வந்து அள்ளிச் செல்லுங்கள் மலிவு விலைகளில்

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைசன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# Carefirst Family Health Team

## Accepting New Patients




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்


- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!






**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #8 சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

”சிலருக்கு நடிப்பு வரும். ஆனால் வசனத்துடன் இணைந்து வராது. சிலர் வசனங்களை பேசுவார்கள். அவர்களுக்கு நடிப்பு ஒத்துழைக்காது. கணேசனிடம் இந்த இரண்டும் இணைந்து கிடைக்கிறது. வசனங்கள் சொற்களின் தன்மைக்கேற்ப, காட்சிகளின் சூழ்நிலைக்கு ஏற்ப ஏற்றி இறக்கி நிறுத்தி அவர் பேசும்போது கூடவே அவரது முகமும் விழிகளும் பேசுவதை நாம் காண்கிறோம்.
கணேசனின் முகம்( “ஆழுடீஐடுநு குயுஊநு“ )மொபைல் .ஃபேஸ் எனச் சொல்லக் கூடியது. சோகத்திலிருந்து மகிழ்ச்சிக்கோ, மகிழ்ச்சியில் இருந்த வெறுப்புக்கோ, வெறுப்பில் இருந்து கோபத்திற்கோ, கோபத்திலிருந்து சாந்தத்திற்கோ, ஒன்றுக்கொன்று மாறுபட்ட உணர்ச்சிகளை நொடியில் சித்தரிக்கும் முகம் அவருடையது.
ஒன்றுக்கொன்று மாறுவது மட்டுமல்ல, எந்த உணர்ச்சியிலிருந்து எந்த உணர்ச்சிக்கு வேண்டுமானாலும் தாவக்கூடிய முகம் அவருடையது. சுபாவமாகவே அவருடைய அங்கங்களும் இவற்றுடன் நடிக்க ஆரம்பித்து விடுகின்றன.

”சுருதியும் தாளமும் போல முகபாவத்துடன் இவையும் சேர்ந்து நடிப்பின் கூட்டிசையாக அவை அமைந்துவிடுகின்றன!,” என அளப்பரிய விமர்சனம் செய்கிறார் சிவாஜி அவர்களின் நடிப் பாற் றலை தோண்டித் தோண்டி வெளிக்கொண்டுவந்த முதன்மை இயக்குனரான எல். வி பிரசாத் அவர்கள்.



கிருஷ்ணன்-பஞ்சு இருவரினதும் இயக்கத்தில் வெளியான “பராசக்தி“க்கு பிறகு சிவாஜிக்கு மகோன்னதமான வெற்றியையும் புகழையும் தந்த “மனோகரா“ படத்தின் இயக்குனரே எல்..வி பிரசாத் என்பது குறிப்பிடத்தக்கது.
நானும், சிவாஜி கணேசன் எனும் நடிப்புச் சக்கரவர்த்தி பற்றி எனது நினைவாற்றலும் படிப்பு வாசனையும், சிதிலமடைந்த முன்பு தமிழர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் எனும் பேரவா கொண்டு எழுதுகிறேன். வாசிப்பு ரசனை குறைந்து வருவது கண்டு மிகவும் வேதனைப்படுகிறேன்.
”பேசும் படம்”, எனும் பிரபலமான சினிமா இதழில் செப்டம்பர் 1960 கடலூரைச் சேர்ந்த ராமநாதன் எனும் வாசகர் நடிகர்திலகம் என்ற இந்த அற்புதமான பட்டப்பெயரை கணேசனுக்கு வைக்க காரணமாய் இருந்தவர் யார்? என கேள்வி கேட்டிருந்தார். அதற்கு “பேசும்படம்“ இதழில் வெளிவந்த பதிலை இங்கே தருகிறேன்.
மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 1957 ஒரு நாள் எங்கள் காரியாலயத்திற்கு ஒரு கடிதம் வந்தது. கேள்வி எழுதிய வாசகர் “பேசும் படம்“ இதழின் ஆயிரம் ஆயிரம் ரசிகர்களில் ஒருவர். சிவாஜி கணேசன் இன்று நடிப்பில் தன்னிகரற்று விளங்குகிறார். அவருக்கு “நடிகர் திலகம்“ என்ற பட்டத்தை அளிக்க பேசும்படம் ஏன் முன்வரக்கூடாது?
அதை விமரிசையாகக் கொண்டாட ஒரு விழாவும் ஏற்படுத்த வேண்டும் அதற்கு அன்பளிப்பாக 2 ரூபாய் அனுப்பி இருக்கிறேன்” என எழுதியிருந்தார். ரசிகர் தெரிவித்த கருத்தை பேசும்படம் ஏற்றுக்கொண்டு நடிகர்திலகம் என்ற பட்டத்தையும் சிவாஜிகணேசனுக்கு அளித்தது. இந்த மகோன்னதமான பட்டமளிப்புக்கு பின்னாலேயே தான் சிவாஜி அவர்கள் நடித்த படங்களில் எல்லாம் “நடிகர் திலகம்“ சிவாஜி கணேசன் என்று டைட்டிலில் காட்ட ஆரம்பித்தார்கள்.
மேலும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பற்றி “பேசும் படம்“ எத்தனை உயர்வாக நினைக்கிறது என்பதற்கு உதாரணமாக, ஜூலை 1960 “பேசும்படம்“ இதழில் வெளியான ஒரு கேள்வி - பதில் இக்காலத்திய நன்றி மறந்த தமிழர்கள் சிலருக்கும் பொருத்தமாக அமைகிறது.

கேள்வி: சிவாஜி பற்றி சில வரிகள்?
பதில்: “இந்தத் தலைமுறையின் சிறந்த நடிகர், நடிகர் திலகம், நேருஜியால் இந்தியாவுக்கு எவ்வளவு மதிப்போ அவ்வளவு மதிப்பு சிவாஜியால் பட உலகுக்கு உண்டு.
ஆனாலும் அவரது திறமையைப் புரிந்து கொள்ள முயற்சிக்காமல் சிலர் இருப்பது தான் விந்தை. இந்த அற்புதத்தை வேறு எந்த நாட்டிலும் காண முடியாது என பதில் எழுதி இருந்தனர்.
நல்லது நமது நடிகர் திலகம் திரைப்படங்கள் மூலம் ஆற்றிய தமிழ்த் தொண்டு பற்றி முந்தைய இதழில் எழுதி இருந்தோம். அவரது மொழிப்பற்று, சங்கத் தமிழையும் விட்டுவைக்கவில்லை. சிவாஜி அவர்கள் உரைத்த சங்கத் தமிழ் செய்யுள் என்ன? அதற்கு களம் அமைத்த காட்சிகள் தான் என்ன?

”நான் பெற்ற செல்வம்”(1956) எனும் படம் பாரகன் பிக்சர்ஸ் எனும் தயாரிப்பு நிறுவனம் தயாரித்து வெளியானது. நடிகர் திலகம் அவர்களுக்கு புகழ் சேர்த்த படங்களில் இதுவும் ஒன்றாகும். இப்படத்திற்கு உரையாடல் எழுதியவர் அருட்செல்வர் எனப் பின்னாளில் கௌரவம் பெற்ற கலைஞர் ஏபி நாகராஜன் அவர்களாகும். இப்படத்தில் ஒரு ஓரங்க நாடகம் இணைக்கப்பட்டது. சிவாஜி அவர்களின் நடிப்பிற்கு தீனி போடுவதற்கும் - தியேட்டருக்கு நாடகப் பிரியர்களை வர வைப்பதற்காகவும் - அதிக வசூல் வருவதற்காகவும் இந்த நாடகங்கள் உதவின. சிவாஜி அவர்களைத் தவிர வேறு நடிகர்களுக்கு, இவ்வாறான ஓரங்க நாடகங்கள் இணைக்கப்படுவது இல்லை.
“ராஜா ராணி“ (1956) படத்தின் இரு நாடகங்கள் “சாக்ரடீஸ்“ “சேரன் செங்குட்டுவன்“ நாடகம் அன்னையின் ஆணை“ (1958) “சாம்ராட் அசோகன்“ நாடகம் “தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை“ (1959)இல் “பொற்கைப்பாண்டியன்“ நாடகம் (1953) ரத்தத்திலகம் (1963) இவ்விரு படங்களிலும் “ஒத்தெல்லோ“ நாடகம் (1957)இல் வெளிவந்த “புதையல்“ படத்தில் கலைஞர் மு.கவின் “கண்டி ராஜா“ இசை நாடகம், “நவராத்திரி“ (1964) “சத்தியவான் சாவித்திரி“ இசை நாடகம் “ராஜபார்ட் ரங்கதுரை“ (1973) “திருப்பூர் குமரன்“ “ஜூலியஸ் சீசர்“ “ராமன் எத்தனை ராமனடி“ இன் (1970) “வீரசிவாஜி“ “இருமலர்கள்“ (1967)இல் “கோவலன் மாதவி “ நாட்டிய நாடகம் “எங்கிருந்தோ வந்தாள்“ 1970இல் “சகுந்தலை து‘யந்தன்“ இசை நாடகம் என சிவாஜி அவர்களின் நாடக பாணி நடிப்பிற்கு கட்டியம் கூறின.
நான் பெற்ற செல்வம் படத்தில் நக்கீரன், சிவன் என இரு வேடங்களில் தோன்றுவார். கதை உங்களுக்குத் தெரியும் பின்னாளில் 1965 ம் ஆண்டு, ஏபி-என் அவர்கள் இக்காட்சியைக் கொஞ்சம் விரிவுபடுத்தி திருவிளையாடல் படத்தில் நாகே‘ அவர்களை அருமையாக நடிக்க வைத்து பிரமாதப் படுத்தியிருப்பார்.
ஏழைப் புலவர் தருமிக்கு சிவபெருமான் எழுதிக்கொடுத்த சங்கத் தமிழ்ச் செய்யுள் பற்றி பார்ப்போம். ஆக சிவாஜி அவர்கள் முதன் முதலில் பாடம் நடத்திய “சங்கத்தமிழ்“ செய்யுள் இதுதான்!,



”இறையனார்” பாடிய அகவற்பா என அறிகிறேன்?
”கொங்குதேர் வாழ்க்கை
அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது
மொழிமோ!
பயிலியது கெழீஇய
நட்பின் மயிலியிற் செறி-
யெயிற் நரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ
அறியும் பூவே!”

என்று பல்லை உடைக்கும் சங்க இலக்கிய பாடலை சிவன் வேடத்தில் உச்சரிப்பது. இப்படி தமிழ் மொழியில் அவர் அளவுக்கு அதிகப்படியான எண்ணிக்கையில் தமிழ் வார்த்தைகளை பேசி எங்களையும் தாய்மொழி தமிழை காதலிக்க வைத்த“ தமிழ் ஆசான்“ இப்பெருமகனாரே!
இனி செய்யுளின் விளக்கத்தையும் பார்ப்போம்.

”தலைவன் தலைவியின் காதலில் மெய்மறந்து அவளது கூந்தலில் வரும் நறுமணத்தை புகழ்ந்து நோக்கிப் பாடுவதாக செய்யுள் அமைந்திருக்கும்”!
”அதாவது மலர்கள் இடத்தில் உள்ள மகரந்தப் பொடியை ஆராய்ந்து கொண்டிருக்கும் தும்பி இனத்தைச் சேர்ந்த வண்டே நீ கண்ட மலர்களில் இந்த மங்கையின் கூந்தல் நறுமணத்தை விட அதிக மனமுள்ள பூவும் உண்டோ? என அர்த்தம் கொண்ட செய்யுளை எழுதி பொருளுரைத்து தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவர் நக்கீரர் உடன் ஏபி நாகராஜன், சோமசுந்தரக் கடவுளாக நேரில் தோன்றி வாதாடும், நடிகர் திலகம் ஆகியோர் பங்கேற்று நடித்த தமிழ் இன்பம் தரும் காட்சியை மீண்டும் ஒருமுறை திருவிளையாடல் 1965 படத்தினை பார்த்து இன்புறுங்கள்.

இன்னும் ஒரு “சங்கத் தமிழ்“ செய்யுள் உடன் அடுத்த இதழில் வாசிப்போம்!
காட்சிகள் விரியும்






மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 908



# மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்
## - கொழும்பு -

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டதோடு பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில், அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரசின் வழிகாட்டல்களை ஏற்று பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகயாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரோனா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா மருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

**மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்**

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷ்ய மாம்ருதாத்'
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடுநாமும் நலமடைந்து உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.

பழைய இடத்திலேயே இரண்டு அரசமரங்களும், இடையில் வேப்பமரமும் சூலமும் காணப்பட்டன. 1980 ஆம் ஆண்டு வீடமைப்புத்திட்டத்தின் கீழ் புதியவீடுகள் கட்டப்பட்டபோது வழிபாட்டுக்குரிய இடமாக அரசமரத்தடியில் ஒரு சிறு இடம் ஒதுக்கப்பட்டு ஒரு சிறுமாடம் கட்டப்பட்டது. இவ்வேளையில் காளி அன்னையின் சூலம் இருந்த இடத்தில் வேறொரு மதத்தெய்வத்தை அமைக்கும் முயற்சிகள் நடந்தன. இவ்வேளையிலேயே யாரும் எதிர்பாராத அற்புதம் நிகழ்ந்தது. அன்னையுடைய தரிசனம் அரசமரத்தடியிலே நிகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து அன்னையை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டது. சூக்குமவடிவாகிச் சூலமாகக் காட்சி கொடுத்த ஸ்ரீ பத்திரகாளி அன்னை சிலைவடிவிலே அருள் கொடுக்க ஆரம்பித்தாள். ஆகம முறைப்படி அன்னையை அவ்விடத்திலே பிரதிஷ்டை செய்தனர்.

1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்திலே தமிழர்களுடைய உயிரும், உடமைகளும், அவர்களது பாரம்பரிய கலாச்சாரச் சின்னமாக விளங்கிய திருக்கோயில்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் அனைவரும் அறிந்ததே. எனினும் பெரும்பான்மையின மக்கள் வாழும் சூழலிலே காணப்பட்ட வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீபத்திரகாளி அம்மாள் ஆலயம் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்திலே் எவ்வித சேதத்திற்கும் உள்ளாக்கப்படவில்லை என்பதிலிருந்து அனைத்தின மக்களும் மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அன்னையிடம் கொண்ட பயபக்தி புலப்படும். எனினும் இனக்கலவரத்தின் பின் ஆலயம் பூசை வழிபாடுகளின்றிக் காணப்பட்டது. சிறிது காலத்தின் பின்னர் ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் அடியவர்கள் ஒன்றுகூடிப் பரிபாலனசபையினை அமைத்து மீண்டும் வழிபாடியற்ற ஆரம்பித்தனர். இதன் பின்னர் மரத்தடிக் கோயிலாக விளங்கிய மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தை மணிமண்டபக் கோயிலாக்கத் திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டது.

ஆரம்பகாலத்திலே அன்னை ஸ்ரீபத்திரகாளி தரிசனம்கொடுத்த அதே முறையிலேயே நவீன ஆலயமும் அமைக்கப்பட்டது. அத்தோடு தொடர்மாடியின் கீழ் வணங்கப்பட்டுவந்த ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலயத்திலே அமைந்திருந்த பிள்ளையார், லிங்கம், வேலாயுதம் முதலிய பரிவார மூர்த்திகளும் இப்புதிய ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஸ்தாபனம் செய்யப்பட்டனர். 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆந் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, திருப்பணிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ஸ்ரீபத்திரகாளி, பிள்ளையார், சிவன், நாகதம்பிரான், புராதன அம்பாள், நவக்கிரகம் ஆகிய மூர்த்தங்களுக்கான ஆலயங்கள் அமைக்கப்பட்டன. ஆலயம் அமைந்துள்ள பரப்பளவு சிறியதாகக் காணப்பட்டமையால் ஆகமமுறைப்படி ஆலயத்தை அமைப்பது கடினமாகக் காணப்பட்டது. எனினும் அடியார்களின் விருப்பத்திற்கேற்ப மரத்தைச்சுற்றிச் சந்நிதானங்கள் அமைக்கப்பட்டன.

*வளரும்...*




SCARBOROUGH ASTROLOGER & PSYCHIC
OM SHAKTI ASTROLOGER & PSYCHIC
Master: KALI
9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS
REMOVES BLACK MAGIC, JADOO, VODOO, OBEYA, BUTTU, JINN & GIVES N100% PROTECTION



VEDIC SOLUTIONS AVAILABLE FOR:
* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

100% Guarantee
He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy
PRIVATE & CONFIDENTIAL

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Pandit: Gabbar Vishnu சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

100% Guarantee
Private & Confedential

அகோரா சாமியார்களிடம் சென்று மந்திரங்கள் கற்று கொண்ட ஓம் பரகாஷ்

2697 Eglinton Ave E, Scarborough ON
Next to CIBC Bank (BRIMLEY & EGLINTON)
437-217-3345

*Everyone is hero of their health*

# ekuruvi ~~Night~~ Steps 2020

EKuruvi Night வருடாந்த நிகழ்வு இம்முறை Ekuruvi Steps 2020 ஆக முன்னெடுக்கப்படுகிறது. Covid-19 வைரஸ் பரம்பல் காலத்தில் எமது உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வது அவசியமாகிறது. பல ஆய்வுகள் நாளுக்கு 10,000 காலடிகள் நடைப்பயிற்சியின் பயன்களை அறிவியல் பூர்வமாக நிரூபித்துள்ளன.

ekuruvi Steps 2020 Covid-19 இலிருந்து விடுதலையை நோக்கி காலடி எடுத்துவைப்போம் ,மீண்டும் இயல்பு வாழ்வை நோக்கி காலடி எடுத்து வைப்போம் . BMI யைக் குறைத்து உடல் எடையைப் பேணுவது, நீரிழிவு, இருதய நோய் என்பவற்றை வராது தடுப்பது, சக்தியை அதிகரிப்பது என்று பல பயன்களைக் கொண்ட இந்த நடைப்பயிற்சியைத் தொடர்ந்து மேலும் 50 நாட்கள் என்று இலக்கு நிர்ணயித்து நிறைவேற்றுவதன் மூலம், நாளடைவில் அதுவே பழக்கமாகி உடல் ஆரோக்கியம் மேம்பட உதவும்.

இதனை ஊக்கப்படுத்தும் வகையில் EKuruvi Steps ஆக, நாள் ஒன்றுக்கு 10,000 காலடிகள் மூலம் 50 நாட்கள் வரும் செப்டம்பர் 26 வரை 500,000 காலடிவுகள் என்ற இலக்கு கண்காணிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்படும். 50 நாட்கள் என்ற இலக்கில் இடையிடையே மருத்துவர்களுடனான Zoom காணொளி மாநாடு மூலமாக மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்யப்படும்.

இதில் நீங்களும் இணைந்து நடக்க அனுமதியாக தனியொருவருக்கு $100 டொலர்களையோ அல்லது குடும்பமாக $150 கனடிய டொலர்களையோ அல்லது ஆதரவு அளிப்பதற்கு $50 டொலர்களையோ அல்லது இந்தியா இலங்கையிலிருந்து இணைந்து கொள்பவர்கள் $10 டொலர்களையோ செலுத்தவேண்டியுள்ளது. நீங்கள் இதற்கு தரும் $ 100 டொலர்களுடன் நாங்கள் (இகுருவி) கொடுக்கும் $10 டொலருடன் $110 டொலர்களாக தாயகத்தின் கல்வி அபிவிருத்திக்கு வழங்கப்படும் .

ஆகவே, இந்த நிகழ்வில் உங்களைப் பதிவு செய்வதன் மூலம், உங்கள் உடல் நலனையும் பேணி, எமது இளம் சந்ததியினர் வாழ்வின் மேம்பாட்டுக்கும் உதவ முடியும். நீங்களும் இணையும் போது உங்களுக்கான இணைய பகுதி திறக்கப்பட்டு உங்களது ஒவ்வொருநாள் காலடிகளும் பதிவு செய்யப்படும் .அனைவருக்கும் கனேடிய சான்றிதழ்களும் , பரிசில்களும் வழங்கப்படும்

எமது ஆரோக்கியத்தைப் பேணுவதுடன் தாயகத்துக்கும் உதவுவோம்!

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

www.ekuruvisteps.ca

*நவஜீவன் அனந்தராஜ்*
Cell: 416 272 8543

Ekuruvi Steps 2020 - 10,000 steps per day - Join us with the 250 Participant already in the program

From Today to September 26, 2020

This year due to the lockdown and the stress caused by Covid-19 prompted EKuruvi to change our stride again. We adopted the motto of "The biggest gift a person can give to their family is the good health of themself. Hence we asked our followers to commit to a common goal of achieving 1 million steps in 100 days. This commitment not only keeps us healthy but it also makes us come closer during this isolation by achieving a common goal.

It's an opportunity for all participants to show their commitment to 10,000 steps per day for another 50 days. The program is monitored on a weekly basis and seminars with professionals in the medical field. For some getting 10,000 steps may be easy but for others giving up a sedentary lifestyle might be tough. This challenge will definitely help you find your baseline of what you normally walk in a day.

It is indeed going to encourage overall health and consistent physical activity to offset negative effects on idle time. In short, walking is an easy activity for all fitness levels and ages and an eye-opener to overcome several health problems.

To be a part and take advantage of Ekuruvi Steps 2020, all you need to do is pay $100 (CA) per individual or $150 (CA) for the entire family or Walk Supporters $50 (CA ) or Walk From India and Sri Lanka ( $10 CA ). Ekuruvi will proudly match 10% of your membership and donate the funds for an educational project back home. when you join us you will receive a pedometer watch, and a chance to win $1000.

Visit www.ekuruvisteps.ca

**Navajeevan Anantharaj**

# WWW.EKURUVISTEPS.CA

# இவ்வார ராசிபலன்

**14-08-2020 வெள்ளி தொடக்கம் 20-08-2020 வியாழன் வரையும்**





மேஷம்:
துணிவோடு செயல்பட்டு துன்பங்களை துரத்தியடிக்கக் கூடிய வாரம். பொறாமை விலகும். குதுகலம் சேரும். வருமானம் வரும். கல்வி ஆர்வம் கூடும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பூமி லாபம் உண்டு. தான தர்மங்கள் பலன் தரும். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும். மங்கள செய்தி வரும். முயற்சிகள் பலன்தரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். வழிபடவேண்டிய தெய்வம்: தீர்த்தபாலீஸ்வரர். அதிர்ஷ்ட எண்: 2, 4, 6, 8. அதிர்ஷ்ட நிறம் ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள் V, U




ரிஷபம்:
மென்மையான பேச்சுக்களால் மேன்மைகளை சந்திக்கக்கூடிய வாரம். குதுகலம் தாண்டவமாடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு வெளிப்படும். கணவன் மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்கு சந்தை லாபம் தரும்.முயற்சிகள் பலன் தரும். வெறுப்புகள் அகலும், சிறப்புகள் சேரும். தாய் நலனில் கவனம் தேவை. நிதி பற்றாக்குறை நீங்கும். உடல் சோர்வு ஏற்படும். கல்வி ஈடுபாடு கூடும். வழிபடவேண்டிய தெய்வம்: காரணீஸ்வரர். அதிர்ஷ்ட எண்:7,3,5,2 அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B, T




மிதுனம்:
சிக்கனத்தைப் கடைப்பிடித்து செல்வத்தை கைப்பிடிக்க வேண்டிய அற்புதமான வாரம். நிதி நிலமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். புதிய வாய்ப்பு தேடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: விஸ்வரூப ஆஞ்சநேயர். அதிர்ஷ்ட எண்: 0, 9 ,3, 6 அதிர்ஷ்ட நிறம். அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E, Z




கடகம்:
நலமும் வளமும் நாடி வரக்கூடிய நன்மையான வாரம். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகமாகும். ஆதலால் கவனம் தேவை. நண்பரால் செலவு உண்டு. உறவுகளால் நன்மை உண்டு. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத் தொழில் உயர்வு தரும். கல்விச் செலவு உண்டு.வளமான சிந்தனை உருவாகும். வழிபடவேண்டிய தெய்வம்: உலகளந்த பெருமாள். அதிர்ஷ்ட எண். 3, 1, 2, 9 அதிர்ஷ்ட நிறம். சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y, G




சிம்மம்:
சகாயமான சூழ்நிலைகளும் சந்தோஷமான நிகழ்வுகளும் அமையக்கூடிய வாரம். மற்றவரால் பாராட்ட படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். உடல் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். வழிபடவேண்டிய தெய்வம்: ஏகாம்பரேஸ்வரர். அதிர்ஷ்ட எண்: 6, 5 ,7 ,0 அதிர்ஷ்ட நிறம். பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள். F, T




கன்னி:
யோகமும், தியாகமும் கலந்த திருப்தியான வாரம். அலைச்சல் அதிகரிக்கும். பூர்வீக சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். ரியல் எஸ்டேட் லாபம் தரும். கணவன் மனைவி கருத்து வேறு-பாடு அகலும். உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். உடல் நல-னில் கவனம் தேவை. பிரச்சனைகள் குறையும். நிதி நிலமை சீராகும். வெளியூர் பயணம் ஏற்படும். நல்லோர் நட்பு கிட்டும். வழிபடவேண்டிய தெய்வம்: கோயமுத்தூ ர் ஸ்ரீகோணியம்மன். அதிர்ஷ்ட எண்: 7, 1, 9, 0 அதிர்ஷ்ட நிறம். இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள். W, K




துலாம்:
திட்டமிட்ட காரியத்தில் வெற்றி கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். திட்டங்கள் வெற்றி பெறும். உழைப்புகள் கடுமையாக இருக்கும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வணிகத் தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். நட்பு வட்டம் விரிவடையும் சுபச் செய்தி வந்து சேரும்.கனவுகள் நினைவாகும். சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு. திருஷ்டிகள் விலகும். வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீபுரம் ஸ்ரீ லட்சுமி நாராயணீ. அதிர்ஷ்ட எண்: 8,3,0,2 அதிர்ஷ்ட நிறம். குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள். L,A




விருச்சிகம்:
அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். சந்தோஷம் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத் தேவைகள் அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. தொலைப்பேசி தகவல் தெந்தரவு ஏற்படுத்தும். புண்ணியஸ்தளங்களுக்கு செல்வீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் பலன் தரும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். வழிபடவேண்டிய தெய்வம்: ஜெகநாதப்பெருமாள் அதிர்ஷ்ட எண்: 6,0,2,3 அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்து: P, C




தனுசு:
பொன்னும், பொருளும், பூமியும், வாகனமும் வாங்கி சேர்க்கக்கூடிய வகையான வாரம். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். போதாத காலம் விலகும். தோதான எண்ணங்கள் உருவாகும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். குழப்பங்கள் நீங்கும். மன நிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். வம்பு தும்புகள் தேடி வரும். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. வழிபடவேண்டிய தெய்வம்: புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன். அதிர்ஷ்ட எண்: 5, 1 ,9, 2 அதிர்ஷ்ட நிறம். இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள். R, E




மகரம்:
வகையான வாழ்வும், மிகையான வரவும் முறையாகக் கிடைக்கக் கூடிய வாரம். தங்க நகைகள் சேரும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கவனம் தேவை. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அபிராமேஷ்வர். அதிர்ஷ்ட எண். 2, 1, 0, 8 அதிர்ஷ்ட நிறம். குங்கும கலர். அதிர்ஷ்ட எழுத்துக்கள். R, D




கும்பம்:
உதவியும், பதவியும் கிடைக்கக்கூடிய உன்னதமான வாரம். பணியி-ல் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். உடல் நலம் சீராகும். மற்றவரால் பாராட்டுப்படுவீர்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புகள் கூடும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். வழிபடவேண்டிய தெய்வம்: லலிதா செல்வாம்பிகை. அதிர்ஷ்ட எண்: 1, 2, 6, 9 அதிர்ஷ்ட நிறம்: நீலம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X, N




மீனம்:
பொருளாதாரத்தில் சிறப்பும், வாழ்வாதாரத்தில் பொறுப்பும் சேரக்கூடிய வாரம். குதூகலப் பயணம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். தொழில் நிம்மதி கொடுக்கும். ஆலய வழிபாடு ஆறுதல் தரும் பெண்களுக்கு யோகம் கூடும். நல்வர் நட்பு உருவாகும். தோல்வி நிலை மாறும் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வழிபடவேண்டிய தெய்வம்: சொர்ணபுரீஷ்வரர். அதிர்ஷ்ட எண்: 7, 4, 6, 9 அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G, C


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
‘ராஜயோகம்’
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377



Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236


Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# அன்பின் தொனி - 573

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது.**

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது, அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனைவரைக்கும் சுற்றி யோடுகிறது, அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை. கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப் பிக்கிறதுமாயிருக்கிறது, கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது, கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது, கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ள துமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன், அவைகளைக் கைக்கொள்ளுகிற தினால் மிகுந்த பலன் உண்டு. தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும் அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.
**- சங்கீதம் 19: 1-14**

**நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பார்.**

ஆபத்துநாளிலே கர்த்தர் உமது ஜெபத்தைக் கேட்பாராக, யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக. அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசையனுப்பி, சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக. நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து, உமது சர்வாங்க தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக. அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக. நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம், உமது வேண்டுதல் களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக. கர்த்தர் தாம் அபிஷேகம்பண்ணினவரை இரட்சிக்கிறார் என்பதை இப்பொ ழுது அறிந்திருக்கிறேன், தமது வலதுகரம் செய்யும் இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து, தமது பரிசுத்த வானத்திலிருந்து அவருடைய ஜெபத்தைக் கேட்பார். சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாரா ட்டுகிறார்கள், நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம். அவர்கள் முறிந்து விழுந்தார்கள், நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம். கர்த்தாவே, இரட்சியும், நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக. **- சங்கீதம் 20: 1-9**


**கர்த்தாவே, உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும்.**

கர்த்தாவே, உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார்! உம்முடைய இரட்சிப்பிலே எவ்வளவாய்க் களிகூருகிறார்! அவருடைய மனவிருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளி, அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தை தள்ளாதிருக்கிறீர். உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு எதிர்கொண்டுவந்து, அவர் சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர். அவர் உம்மிடத்தில் ஆயுசைக்கேட்டார் நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர். உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாயிருக்கிறது மேன்மையையும் மகத்துவத்தையும் அவருக்கு அருளினீர். அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர் அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர். ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார் உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார். உமது கை உமது சத்துருக்களெல்லாரையும் எட்டிப்பிடிக்கும் உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும். உமது கோபத்தின் காலத்திலே அவர்களை அக்கினிச் சூளையாக்கிப் போடுவீர் கர்த்தர் தமது கோபத்திலே அவர்களை அழிப்பார் அக்கினி அவர்களைப் பட்சிக்கும். அவர்கள் கனியை பூமியிலிராதபடி நீர் அழித்து, அவர்கள் சந்ததியை மனுபுத்திரரிலிராதபடி ஒழியப்பண்ணுவீர். அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பொல்லாங்கு நினைத்தார்கள், தீவினையை எத்தனம்பண்ணினார்கள் ஒன்றும் வாய்க்காமற்போயிற்று. அவர்களை இலக்காக வைத்து, உம்முடைய அம்புகளை நாணேற்றி அவர்கள் முகத்திற்கு நேரே விடுகிறீர். கர்த்தாவே, உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும், அப்பொழுது உம்முடைய வல்லமையைப் பாடிக்கீர்த்தனம்பண்ணுவோம்.
**- சங்கீதம் 21: 1-13**

**தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்.**

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர் தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத் தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல் லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணு கிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும், நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். **- சங்கீதம் 23: 1-6**

*தொடரும்...*

# TORONTO ASTROLOGER & PSYCHIC

# Pandit: ARJUN

## 9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS



**VEDIC SOLUTIONS AVAILABLE FOR:**

* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

**REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION**

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

**100% Guarantee**

He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy

**PRIVATE & CONFIDENTIAL**

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit: Arjun** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

**கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்**

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

**அகோரா சாமியார்களிடம் சென்று மந்திரங்கள் கற்று கொண்ட ஓம் பிரகாஷ்**

**2607 Eglinton Ave East, Scarborough ON, M1K 2S2**

**UPSTAIRS ERA SUPERMARKET , (BRIMLEY & EGLINTON)**

**Call: 416-722-9498**

# சுதந்திர தின விழாவையொட்டி நாடு முழுவதும் கண்காணிப்பு தீவிரம் : சென்னையில் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு



சுதந்திர தின விழாவையொட்டி நாடு முழுவதும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. சென்னையில் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். விமானநிலையத்தில் வாகன சோதனை மும்முரமாக நடத்தப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு உள்ளது. இதன் காரணமாக பஸ், ரெயில் உள்ளிட்ட பொது போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. பொது இடங்களில் மக்கள் கூடுவதற்கும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் வருகிற 15ந் தேதி (சனிக்கிழமை) நாடு முழுவதும் சுதந்திர தின விழா கொண்டாடப்படுகிறது. அன்று காலை டெல்லி செங்கோட்டையில் நடைபெறும் விழாவில் பிரதமர் மோடி தேசிய கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகிறார். மாநில தலைநகரங்களில் நடைபெறும் விழாவில் அந்தந்த மாநில முதல் மந்திரிகள் கொடி ஏற்றுகிறார்கள். சென்னை கோட்டையில் முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகிறார்.

கொரோனா அச்சுறுத்தலை தொடர்ந்து, சுதந்திர தின விழாவை கொண்டாட மத்திய அரசு பல்வேறு வழிகாட்டுதல்களை வெளியிட்டு, அவற்றை பின்பற்றுமாறு மாநில அரசுகளை கேட்டுக்கொண்டு உள்ளது.

சுதந்திர தின விழாவை யொட்டி, அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. தலைநகர் டெல்லியில் விமானநிலையம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறது.

தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீசாரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த டி.ஜி.பி. திரிபாதி உத்தரவிட்டு உள்ளார்.

சென்னை நகரில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து போலீஸ கமிஷனர் மகேஷ்குமார் அகர்வால் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

சுதந்திர தின விழாவை யொட்டி சென்னையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. 3 கூடுதல் கமிஷனர்கள் தலைமையில் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். ரோந்துப்பணி தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறது. வாகன சோதனை நடத்தப்படுவதோடு, விடுதிகளில் சோதனை போடப்படுகிறது. சந்தேகப்படும் நபர்கள் குறித்து தகவல் தெரிவிக்குமாறு போலீசார் கேட்டுக் கொண்டு உள்ளனர்.

சுதந்திர தின விழா நடைபெறும் கோட்டையில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்படும். நகரின் முக்கிய இடங்களில் ஆளில்லா குட்டி விமானங்கள் (டிரோன்) மூலம் கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. விமானநிலையத்தில் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு மும்முரமாக வாகன சோதனை நடத்தப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

சுதந்திர தின விழாவை யொட்டி சென்னை எம்.ஜி.ஆர். சென்டிரல் ரெயில் நிலையத்திலும், எழும்பூர் ரெயில் நிலையத்திலும் நேற்று மோப்ப நாய்கள் மற்றும் ஸ்கேனர் கருவி மூலம் ரெயில்வே பாதுகாப்புப்படையினரும், ரெயில்வே போலீசாரும் தீவிர சோதனை நடத்தினர்.

சுதந்திர தினம் வரையில் இதுபோன்ற சோதனை தொடர்ந்து நடத்தப்பட்டு, கண்காணிப்பு தீவிரப்படுத்தப்படும் என்றும், அனைத்து புறநகர் ரெயில் நிலையங்களும் 24 மணி நேரமும் கண்காணிப்பு கேமரா மூலம் தொடர்ந்து கண்காணிப்பட்டு வருவதாகவும் ரெயில்வே பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். சேத்துப்பட்டு மற்றும் பேசின் பாலம் ரெயில்வே பணிமனைகளிலும் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு உள்ளனர்.

# கொரோனாவிலிருந்து குணமடைந்த சென்னை போலீஸ்காரர்கள் தங்களது ரத்தத்தை பிளாஸ்மா சிகிச்சைக்காக தானம்

கொரோனாவுக்கு எதிரான போரில் பிற அரசு துறைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உறுதுணையுடன் தமிழக காவல்துறை களத்தில் முன்னணியில் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகரத்தில், சென்னை பெருநகர காவல்துறையினர் கட்டுப்பாட்டு பகுதி மேலாண்மை, தனிமைப்படுத்துதல் மேலாண்மை, தொடர்புத் தடமறிதல், சமூக இடைவெளி விதிமுறைகளை அமல்படுத்துதல் மற்றும் சந்தை இடங்களில் கூட்டமாக மக்கள் கூடுவதைக் ஒழுங்குபடுத்துதல் போன்ற கடமைகளைச் செவ்வனே செய்து வருகிறார்கள். இக்கடமைகளை நிறைவேற்றும்போது ஏராளமான பொதுமக்களுடன் தொடர்பு கொள்கின்ற ஒரு நிலையும் உள்ளது. தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையிலும், 1920 காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டனர்.

1549 காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவல் ஆளினர்கள் இத்தொற்று நோயிலிருந்து சிகிச்சைப் பெற்று குணமாகி மீண்டும் கடமையாற்றும் வகையில் பணிக்குச் சேர்ந்துள்ளனர். மேற்குறிப்பிட்ட காவல்துறை அதிகாரிகளும் ஆளினர்களும் தங்கள் கடமைகளை



முன்பிருந்த அதே அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும் செய்து வருகிறார்கள்.கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிளாஸ்மா சிகிச்சையளிக்க உதவும் வகையில் பிளாஸ்மாவை சேகரிக்க தமிழக அரசு பிளாஸ்மா வங்கி ஒன்றை நிறுவியுள்ளது, தமிழக முதலமைச்சர் கொரோனா தொற்றுக்கு சிகிச்சையளிக்க பிளாஸ்மா வழங்க முன்வருமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

தமிழக முதலமைச்சரின் அவ்வேண்டு கோளுக்கிணங்க கொரோனாவிலிருந்து குணமடைந்த 48 காவல்துறைப் பணியாளர்கள் தங்கள் பிளாஸ்மாவை தானம் செய்ய முன்வந்தனர். மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர், 38 காவல் துறைப் பணியாளர்கள் 13.8.2020 அன்று பிளாஸ்மா தானம் செய்ய தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டனர். சென்னை பெருநகர காவல் துறையின் ஆயுதப் படையைச் சேர்ந்த 38 காவல் துறையினர் உள்ளிட்ட 40 காவல் பணியாளர்கள் (2 பெண் காவல் துறையினர் உட்பட) சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜய பாஸ்கர், மகேஷ் குமார் அகர்வால், இகாப, காவல் ஆணையாளர், சென்னை பெருநகர காவல் மற்றும் தமிழக அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இஆப, ஆகியோர் முன்னிலையில் பிளாஸ்மா தானம் செய்தனர்.

கொரோனாவுக்கு எதிரான போர்க்களத்தின் முன்னணியில் கடமையைச் செவ்வனே செய்து வரும் நிலையில், கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோருக்கு பிளாஸ்மா சிகிச்சையளிக்கும் பொருட்டு பிளாஸ்மா வழங்க தாங்களாகவே முன்வந்த காவல் துறையினரின் மனப்பாங்கினை தமிழக முதல்வர் பாராட்டியுள்ளார்.

# அதிமுகவில் முதல்வர் வேட்பாளர் குறித்து இபிஎஸ், ஓபிஎஸ் இணைந்து முடிவு எடுப்பர்: அமைச்சர் ஜி.பாஸ்கரன் பேட்டி

''அதிமுகவில் முதல்வர் வேட்பாளர் குறித்து முதல்வர் பழனிசாமியும், துணை முதல்வர் பன்னீர்செல்வமும் இணைந்து முடிவு எடுப்பர்,'' என கதர்கிராமத் தொழில்கள் நலவாரியத்துறை அமைச்சர் ஜி.பாஸ்கரன் தெரிவித்தார்.சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், சிங்கம்புணரி வட்டாட்சியர் அலுவலகங்களில் வருவாய்த்துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட ஆட்சியர் ஜெ.ஜெயகாந்தன் தலைமை வகித்தார். எம்எல்ஏ கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலை வகித்தார்.

அமைச்சர் ஜி.பாஸ்கரன் திருப்பத்தூரில் 193 பயனாளிகளுக்கு ரூ.29.45 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், சிங்கம்புணரியில் 183 பயனாளிகளுக்கு ரூ.15.45 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.தொடர்ந்து எஸ்.புதூர் ஒன்றியம் பொன்னடைப்பட்டியில் ரூ.2 லட்சத்தில் ஆழ்த்துளை கிணறு அமைக்கும் பணியைத் தொடங்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் லதா, முன்னாள் எம்.பி. செந்தில்நாதன், கோட்டாட்சியர் சுரேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


பிறகு அமைச்சர் ஜி.பாஸ்கரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுகவில் முதல்வர் வேட்பாளர் குறித்து முதல்வர் பழனிசாமியும், துணை முதல்வர் பன்னீர்செல்வமும் இணைந்து முடிவு எடுப்பர்.அதன்படி நாங்கள் நடப்போம். வருகிற 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக கூட்டணி குறித்து அதிமுக தலைமை தான் முடிவு செய்யும். மேலும் சிவகங்கை மாவட்டத்திற்கு முதல்வர் ஆய்வுக்கு வரும்போது, பல நல்ல திட்டங்களை அறிவிக்க உள்ளார்,'' என்று கூறினார்.

# ராமர் கோயிலுக்கான நன்கொடை அளிக்க வங்கிக் கணக்கை வெளியிட்டது அயோத்தி அறக்கட்டளை

ராமர் கோயிலுக்காக நன்கொடை அளிக்க வங்கிக் கணக்கை அதன் அறக்கட்டளை வெளியிட்டுள்ளது. இதில் பொதுமக்கள் அளிக்கும் தொகையின் மூலம் ராமர் கோயில் கட்டப்பட உள்ளது. அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்காக உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் ஸ்ரீராமஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா டிரஸ்ட் எனும் பெயரில் ஒரு அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக, பொதுமக்கள் தொடர்ந்து நன்கொடை அளிக்க முன் வந்தபடி உள்ளனர்.

இந்த சூழலை சாதகமாக்கி சில சமூக விரோதிகளும் இடையில் புகுந்து ராமர் கோயிலின் பெயரில் பணம் வசூல் செய்வதும் தொடங்கி விட்டது. இதன் மீதானப் புகார்களும் எழத் துவங்கி உள்ளது. இப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு அந்த அறக்கட்டளை சார்பில் அதிகாரபூர்வமாக ஒரு வங்கிக்கணக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில், பொதுமக்கள் இனி நேரடியாகப் பணம் செலுத்தலாம் என அறிவிப்பும் வெளியாகி உள்ளது. இது குறித்து ஸ்ரீராமஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையின் செயலாளரான சம்பக்ராய் கூறும் போது, 'இன்று வெளியிட்டுள்ள வங்கிக்கணக்கில் செலுத்தப்படும் நன்கொடை தொகை அனைத்தும் ராமர் கோயில் கட்டுவதற்காக செலவிடப்படும்.

இந்த வங்கி கணக்கு விவரத்தை சமூகவலை தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளது. இதனால், இனி அறக்கட்டளையின் பெயரில் எவரிடமும் பணம் தவறாகப் பணம் வசூலிக்கப்படும் வாய்ப்புகள் இல்லை.' எனத் தெரிவித்தார். கோயில் நன்கொடைக்கான வங்கிக் கணக்கு விவரம் அறக்கட்டளையின் அதிகாரபூர்வமான இணையதளம், முகநூல் மற்றும் டிவிட்டர் பக்கத்திலும் வெளியாகி உள்ளன. இதில் பொதுமக்கள் அதிக அளவில் நன்கொடை செலுத்த நாடு முழுவதிலும் விழிப்புணர்வும் ஏற்படுத்த உள்ளது.ராமர் கோயிலுக்காக ரொக்கப்பணமாக இல்லாமல் தங்கம், வெள்ளி என விலை உயர்ந்த உலோகங்களாகவும் அளிக்கப்படுகிறது. அறக் கட்டளையின் கூட்டம்இதனிடையே, ஸ்ரீராமஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையின் நிர்வாகிகள் கூட்டம் டெல்லியில் மீண்டும் நடைபெற உள்ளது. அனைத்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுடன் இக்கூட்டம் ஆகஸ்ட் 8 இல் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.


SHIRIDI SAI SCHOOL
OF CANADA
ADMISSIONS
OPEN FOR
J/S KINDERGARTEN TO GRADE 6
TO REGISTER YOUR INTEREST PLEASE CALL
416-298-3030
2701 MARKHAM ROAD, SCARBOROUGH


உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவிதத்தில் அடைவு பிடிக்கப்படும்
PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000


Canada VISA
கூடிய விரைவில்
உங்கள் கைகளில்
இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள்
CANADAவிற்கு அழைத்து வர எம்மை நாடுங்கள்
STUDENT VISA
ஏற்பாடுகளை இலகுவான முறையில் விரைவில் செய்து தருபவர்கள்.
TOURIST VISA
தனியாகவோ, குடும்பத்தினருடனோ உல்லாசமாக வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
VISIT VISA
பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
REFUSED VISA
உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.
BUSINESS VISA
உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
10 வருட கால நம்பிக்கையான சேவை
P. Jegan
Director - Flex Institute
+94 777 761 346
flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06, Sri Lanka.
www.flexinstitute.lk Flex Institute
flexinstitute04@gmail.com
Hotline: +94 777-761 346
P. Vijay
Director - Flex Institute
+94 777 555 026

# மரண அறிவித்தல்

**அன்னை மடியில்:** 11 - 06 - 1982



**இறைவன் அணைப்பில்:** 09 - 08 - 2020

# திரு. குமரேசன் நாகேந்திரம்

**இலங்கையில் கொழும்பைப் பிறப்பிடமாவும், கனடாவில் Scarboroughயை வதிவிடமாகவும் கொண்ட திரு. குமரேசன் நாகேந்திரம் அவர்கள் 09-08-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.**

அன்னார் மல்லாகம் சக்திவேல் நாகேந்திரம், இந்திராணி நாகோந்திரம் (விலா கருணா முதியோர் இல்லம் - ஸ்தாபகர்) தம்பதியினரின் பாசமிகு அன்பு மூத்த புதல்வனும்,

சதீஸன், கிருஷாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து சிதம்பரநாதன் (உரிமையாளர் வசந்த மஹால் நகை மாடம் - கொழும்பு, இலங்கை), கருணாகடாச்சி சிதம்பரநாதன், சக்திவேல் ராமலிங்கம் - பாக்கியம் சக்திவேல் ஆகியோரின் அன்புப் பேரனும்,

விஜி அன்டனி (Family & Community Help), வசந்தா வரன் (Liberty at Kennedy), யோசப் அன்டனி, குணேஷ்வரன் வைத்திலிங்கம், தர்மலிங்கம் சக்திவேல், ராமலிங்கம் சக்திவேல் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும்,

ஆதர்ஷ், சாரா, சின்தியா, அபிரா, ஜொனத்தன் ஆகியோரின் பாசமிகு அன்பு உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

*அன்னாரின் பூதவுடல் 18-08-2020 செவ்வாய்கிழமை அன்று காலை 10 மணியில் இருந்து நண்பகல் 12 மணிவரை Chapel Ridge Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, தொடர்ந்து ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.*

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

தகவல்:
குடும்பத்தார்

தொடர்புகள்: சதீஸன்: (416) 722-2560
கிருஷந்தன்: (647) 705-3825
ஆதர்ஷ்: (647) 669-6527
ஜொனத்தன்: (647) 822-3833

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Government Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN
உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree 416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1271 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 14, 2020

# ஒன்றாரியோவின் இரண்டு அமைச்சர்களும் மூன்று மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஸ்காபுறோ வரசித்தி ஆலயத்திற்கு விஜயம்



ஒன்றாரியோ மாகாண நிதி அமைச்சர் Rod Phillips மற்றும் மூத்தோர் விவகாரங்களுக்கான அமைச்சர் Raymond Cho ஆகியோர் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினர்களான திருவாளர்கள் Aris Babikian , Viajy Thanigasalam மற்றும் Christina Maria Mitas ஆகியோர் கடந்த திங்கட்கிழமையன்று மதியம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஶ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்திற்கு அரசு சார்பான விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருந்தனர். ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் அனைவரையும் வரவேற்று பின்னர் விசேட பூசைகளில் கலந்து கொள்ளச் செய்து தொடர்ந்து அவர்களுக்கு கௌரவம் வழங்கப்பெற்றது.

அங்கு உரையாற்றிய அமைச்சர்கள் Rod Phillips, Raymond Cho மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கனடாவில் குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தில் தமிழர் சமூகமானது, அவர் தம் சமய கலாச்சார விழுமியங்களை தொடர்ந்து கடைப்பிடித்து வருவது மற்றும் மத்திய மாகாண மற்றும் உள்ளாட்சி மன்றங்களில் தங்களின் சமூகம் சார்ந்த பிரதிநிதிகள் மூலம் ஆற்றி வரும் பணிகள் தொடர்பாக பாராட்டுக்களைப் பகிர்ந்து கொண்டனர். இங்கே காணப்படும் படங்கள் வைபவத்தில் எடுக்கப்பட்டவையாகும்.



# ஸ்காபுறோவில் தமிழ் பேசும் வர்த்தக அன்பரகள் இணைந்து நடத்திய 'தேவையானோர்க்கான உணவுப் பொருட்கள் சேகரிக்கும் வைபவம்-2020

ஸ்காபுறோவில் சில தமிழ் பேசும் வர்த்தக அன்பர்கள் இணைந்து ஏற்பாடு செய்த 'உணவு தேவைப்படுவோர்க்கான உணவுப் பொருட்கள் சேகரிக்கும் வைபவம்-2020- Food Drive – 2020 கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மதியம் ஸ்காபுறோவில் மார்க்கம்-ஸ்டீல்ஸ் சந்திப்புக்கு அருகில் உள்ள வர்த்தகத் தொகுதியில் அமைந்துள்ள நீலம் மற்றும் சிவப்பு நிற கட்டடங்கள் உள்ள வாகனதரிப்பிடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி உணவுப்பொருட்கள் சேகரிக்கும் நிகழ்வை மூன்று இடங்களில் கிளைகளைக் கொண்ட Cleo's Dry Cleaners President Mr Kumar மற்றும் ஜே ட்ரக் சாரதி பயிற்சி நிறுவனத்தின் அதிபர் திரு ஜே ஆகியோரும் இன்னும் சில வர்த்தக அன்பர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு அழைக்கப்பட்ட வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் ஊடக வியலாளர்கள் ஆகியோர் சமூகமளித்து மேற்படி நிகழ்வுக்கு தங்கள் ஆதவை வழங்கினர். இங்கே காணப்படும் படங்களில் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் ஊடக வியலாளர்கள் ஆகியோர் நிற்பதையும் வேற்று இன நண்பர்கள் நிற்பதையும் காணலாம்.





# ஒன்றாரியோவின் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி, ஈழத் தமிழர்கள் இனப்படுகொலைக் கல்வி வாரத்தை அங்கீகரிக்குமாறு ஒன்றாரியோ முதல்வரை வேண்டியுள்ளது







கனடாவில் அதிகளவு ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வரும் மாகாணமுமாகிய ஒன்றாரியோ மாகாணத்தின் பிரதான எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி, (என்டிபி) ஈழத் தமிழர்கள் இனப்படுகொலலு கல்வி வாரத்தை ஒன்றாரியோ மாகாண நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்குமாறு ஒன்றாரியோ முதல்வரை வேண்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மாகாண முதல்வர் கௌரவ டக் போர்ட் அவர்களுக்கு, ஸ்காபுறோ தென்மேற்கு தொகுதியின் மாகாண நாடாளுமன்ற உறுப்பினரான என்டிபி கட்சியைச் சேர்ந்த Scarborough Southwest, Doly Begum , Brampton East, Gurratan Singh ஆகியோர் எழுதியுள்ள கடிதத்தில், இந்த விடயம் தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில், சட்டமூலம் 104 என்ற இலக்கமுடைய இந்த மசோதாவானது இலங்கையில் இனவாத அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையின் கொடுமைகளை ஒன்றாரியோ பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் அறிந்து கொள்ளும் நோக்கோடு ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற தமிழ் பேசும் உறுப்பினரான விஜய் தணிகாசகலம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.. எனவே மேற்படி மசோதா 104 ஐ உடனயாக ஒன்றாரியோ மாகாண நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து வாக்கெடுப்பிற்கு விடும்படியும். அதற்கு தங்கள் கட்சி, முழுமையான ஆதரவைத் தரும் என்று மேற்படி எம்பிபிக்கள் ஒன்றாரியோ முதல்வருக்கு எழுதியுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு :- Komal Hussain 416-996-3971